# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎: 044 – 26490183
: 9444701953

*11/29, திருமால் நகர் விரிவாக்கம் II,*
*8-வது குறுக்குத் தெரு, பூந்தமல்லி,*
*சென்னை* – 600 056.

## சபைகள் உடைகின்றன - உடையட்டும். ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களின் முகத்திரை கிழிக்கப்படுகின்றன - கிழிக்கப்படட்டும்.

**1. இது சபை அல்ல, இது என் சொந்த வீடு. நான் ஒரு மிலிட்டரி கமாண்டர். நீங்கள் சிப்பாய்கள். எனது கட்டளைகளுக்கு, உபதேசங்களுக்கு நீங்கள் செவிகொடுத்தாக வேண்டும். பட்டாபிராம் பாஸ்டர்.**

**2.** பிரசங்கபீடத்தில் **சொற்பொழிவு: பொம்பள சிரிச்சா போச்சு, புகையிலை விரிச்சா போச்சு. பல்லாவரம் பகுதிகளில் தங்கள் இல்லங்களில் காலேப் யோசுவாவை ஏற்றுக்கொள்கிறவர்கள் வேசிகள்.** பாஸ்டர் தங்கமணி

**3. இந்த ஆண்டு 2007 கிறிஸ்துவுக்குள் உங்கள் நிலையை நீங்கள் சோதித்துப் பார்க்க வேண்டிய கடைசி நாட்களின் கொடிய காலமாயிருக்கிறது. நீங்கள் சபைக்கு உள்ளேயா அல்லது வெளியேயா? அது பிரச்சனையல்ல. நீங்கள் கிறிஸ்துவுக்குள் உள்ளேயா அல்லது வெளியேயா? அது தான் இந்த ஆண்டின் பிரதானமான பிரச்சனை. சுவி. காலேப் யோசுவா**

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைய கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது: ***நீங்கள் தேவனுடைய வார்த்தை மற்றும் இக்காலத்துக்குரிய செய்தியைக்கொண்டு கிறிஸ்துவை அறிகிற அறிவில் பெருகி, அவருடைய திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாய் இருக்கும்பொருட்டு ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியில் வளர்ந்து, கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வரும்பொழுது கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்களில் மேல், முதலாவது மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுடன் கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருக்கும் நாளுக்கு உங்களை காத்துக்கொண்டு, உங்கள் மணவாளன் நினையாத நாழிகையிலே வரும்பொழுது விழித்திருக்கிறவர்களாக காணும்பொருட்டு இந்த புதிய ஆண்டு 2007 உங்களை அந்த மேன்மையான நோக்கத்திற்கு வழிநடத்தவும், கர்த்தர் நன்மையான ஆசீர்வாதங்களை உங்கள் மேல் பொழிந்தருளவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மன்றாடுகிறேன். வாழ்த்துகிறேன். உங்களுக்கு இரக்கமும், சமாதானமும் அன்பும் பெருக்கக்கடவது. ஆமென்.***

2. பிரியமானவர்களே ! ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களாகிய கள்ள கபடமுள்ள வேலையாட்களை குறித்தும், வேற்றுமையான உபதேசங்களைக் குறித்தும் அவ்வப்போது இந்த செய்தி தொகுப்புகளின் வாயிலாக விவரித்து எழுதி, நீங்கள் உங்களை காத்துக்கொள்ளும்படி அவ்வப்போது கர்த்தருடைய நாமத்தினாலே எச்சரித்து வருகிறேன். சுவிசேஷத்தின் சத்தியம், இக்காலத்துக்குரிய செய்தி உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, நான் ஒரு நாழிகையாகிலும் கள்ளகபடமுள்ள வேலையாட்களுக்கு கீழ்படிந்து இணங்கவில்லை. அவர்களுடன் கைகோர்த்துச் சென்று ஒப்புரவாகவும் இல்லை. வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பண உதவிகளுக்காக யாருக்கும் வால் பிடித்து ஐயா, ஐயா, என துதிபாடவும் இல்லை. பெறும் பண உதவிக்காக அவர்களுடைய துர்உபதேசங்களை உங்கள் மீது திணிக்கவும் இல்லை. நான் ஓடினதும், ஒடுகிறதும், நான் பலவிதமான பாடுகள், கஷ்டங்கள், நெருக்கங்கள் மத்தியில் உங்களுக்காக செலவு செய்யும் பணமும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கு மட்டுமே என் ஊழியம் பிரயோஜனமாக இருப்பதை அறிந்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். ஏனென்றால் இலட்சத்தில் ஒன்று என்ற திருஷ்டாந்தத்தை நான் நன்கு அறிவேன். ஆதலால் சத்தியத்திற்கு செவிகொடுக்க, சத்தியத்தை சார்ந்து நிற்க நான் ஒரு கூட்டம் ஜனங்களை எதிர்பார்க்கவில்லை. ஒரு சிலர் என்னோடு இருக்கிறார்கள். அவர்களுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன், நன்றி செலுத்துகிறேன், அது எனக்கு போதும். அவர்கள் என்னை, என் ஊழியத்தை தாங்குகிறார்களா இல்லையா அது குறித்து நான் கவலைப்படவில்லை. கர்த்தர் தாங்குகிறார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

3. என்னை பொறுத்த அளவில் நான் உங்களில் யாராவது ஒருவருடைய கர்த்தருக்குரிய தசமபாகத்தையாவது, சபைக்கடுத்த காணிக்கைகளையாவது இதுவரை இச்சிக்கவில்லை. அதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆனாலும் எனது மிக்க கஷ்டமான நேரத்தில், இக்கட்டான வேளையில் நீங்கள் எனக்கு கொடுத்து உதவி செய்தீர்கள். அதை நான் மறக்கவில்லை. மற்றபடி எனது 57 வயது வரை கடினமாக உழைத்தேன். கர்த்தர் என் கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதித்ததைக் கொண்டு ஊழியம் செய்தேன். பின்பு என் உழைப்பிலிருந்து ஓய்வு பெற்றேன். இந்நாட்களில் என் இரு மகன்கள் கைகளின் பிரயாசத்தினால் கிடைக்கும் சொற்ப வருமானத்திலிருந்து ஊழியத்தின் தேவைகளை சந்தித்து வருகிறேன். அவ்வப்போது ஒரிருவர்கள் கொடுக்கும் காணிக்கைகளை ஊழியத்துக்கும் என் சொந்த செலவுக்கும் பிரயோஜனப்படுத்துகிறேன்.

## சபைகளில் பிளவுகள்

4. கடந்த ஆண்டு, கடைசிமாதத்தில் சென்னை பட்டிணத்தில் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம், நாங்கள் தான் கிறிஸ்துவின் மணவாட்டி, இந்த மணி வேளையில் கர்த்தருடைய வருகை வந்தாலும் நாங்கள் பறந்து சென்று விடுவோம், எங்களுக்கு நிகர் யார்? என தங்களுடைய ஸ்தானத்தை அறியாத, தங்கள் நிலையை மறந்து, வீண் பந்தாவாக, இறுமாப்பாக பேசித்திரியும் இரு கூட்டங்களில் அதாவது சபைகளில் பிளவுகள் ஏற்பட்டன. ஒன்றுபட்டாபிராம் மற்றொன்று பல்லாவரம். இந்த பிளவுகள் கிறிஸ்துவுக்குள் மிக்க வரவேற்கவேண்டிய ஒன்றாகும். இக்காலத்துக்குரிய செய்தி மற்றும் ஊழியம் என்ற போர்வையின் கீழ் ஆங்காங்கு 5,10 நபர்களை கொண்டு, ஒருவர் தன்னை பாஸ்டராக்கிக் கொண்டு மக்களை ஏமாற்றி வருகிறார். ஏமாளிகள் ஏமாந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சபைகள் யாவும் மூடப்பட வேண்டும்.

## பட்டாபிராம் சபையில் பெரும் பிளவு

5. கர்த்தர் பட்டாபிராம் பாஸ்டரை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சைச் செடியாக நாட்டினார். என்னோடு ஐக்கியமாக இருந்த நாட்களில் அவரது சபை சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாக இருந்தது. அவரது கரங்களில் பணம் வந்து சேரச்சேர, காட்டுத் திராட்சைச் செடியின் ஆகாத கொடியாக மாறிப்போனார். இன்று அவருடைய நிலை அந்தோ பரிதாபம்! இவரது மாறுபாடான, விபரீதமான உபதேசங்களால் அங்கு பிளவு ஏற்பட்டது. நான் பிரிந்து வந்தவர்களில் முக்கியமானவருடைய வாக்குமூலத்தை கேட்டு இதை எழுதுகிறேன். இது விஷயமாக எனக்கு டிசம்பர் முதல் வாரத்தில் ஒரு நாள் ஒரு லோக்கல் கால் வந்தது. அப்பொழுது அவர் தன் பெயர் எசேக்கியேல் என்றும், தான் பெரவலூர் சபைக்குச் சென்று வருவதாகவும், என்னை அங்கு சந்தித்திருப்பதாகவும், என்னோடு பேசி இருப்பதாகவும் கூறி பட்டாபிராம் சபையில் நடந்த சம்பவத்தை கூறினார். அதாவது பட்டாபிராம் பாஸ்டர்: (அ) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவனுடையது அல்ல. தேவன் ஆவியாயிருக்கிறார். ஆதலால் அவர் இரத்தம் சிந்த முடியாது. இயேசு கிறிஸ்து சகோ. பிரன்காமைப் போன்று தேவனால் எடுத்து உபயோகிக்கப்பட்ட ஒரு பாத்திரமே. ஆதலால் அவர் கல்வாரியில் சிந்திய இரத்தம் தேவனுடையது அல்ல என்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாட்டை பெற்ற பிறகு அதை மறுதலித்து இயேசு சகோ.பிரன்காமை போன்ற ஒரு பாத்திரம் என பட்டாபிராம் பாஸ்டர் உபதேசித்திருப்பாராகில் இவரைப்போன்று பரிதபிக்கப்படதக்கவர் வேறு யாருமில்லை. இவர் சத்தியத்தை அறியாதிருந்தால் அது இவருக்கு நலமாயிருந்திருக்கும். அப்படியானால் இனி இவரை புதுப்பிக்ககூடாத காரியம். அவர் அந்நாட்களில் தேவனிடத்தில் கள்ளத்தனமாய்த் திரும்பினாரேயன்றி, முழு இருதயத்தோடு அல்ல என்பதே உண்மை.

(ஆ) இயேசு கல்வாரியில் தேவனுடைய இரத்தத்தை சிந்தியதாக ஒரு நாடகம் நடந்தது. இது எப்படியெனில் யாக்கோபின் புத்திரர் யூதாவின் சொல் கேட்டு, யோசேப்பை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டு, யோசேப்பின் அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை அந்த இரத்தத்திலே தோய்த்து பல வருணமான அந்த அங்கியை தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்தில் அனுப்பி இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரனின் அங்கியோ அல்லவோ பாரும் என்று சொல்லி ஒரு நாடகம் ஆடினார்கள். ஆனால் உண்மையிலே யோசேப்பு மரிக்கவில்லை. அவனை எந்த துஷ்டமிருகமும் பட்சித்துப்போடவுமில்லை. அவன் ஒரு கிரயத்துக்கு விற்கப்பட்டான். (ஆதி:37அதி.)

(இ) யோசேப்பு தன் சகோதர்களால் வெறுக்கப்பட்டான். அவ்வண்ணமாகவே இயேசுகிறிஸ்துவும் தன்னுடைய சகோதர்களாலும் ஜனங்களாலும் வெறுக்கப்பட்டார். யோசேப்பு 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அவ்விதமாகவே இயேசுவும் 30 வெள்ளிக்காசுக்காக விற்கப்பட்டார். யோசேப்பு எகிப்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டான். இயேசுவும் தேவனுடைய வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டார். இப்படியாக யோசேப்பின் வாழ்க்கை இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையோடு சம்மந்தப்பட்டது. ஆக யோசேப்பின் இரத்தம் சிந்தப்படவில்லை. சிந்தப்பட்டதாக அவனுடைய சகோதரர் ஒரு நாடகம் ஆடினர். கல்வாரியில் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது உண்மைதான். ஆனால் அது தேவனுடைய இரத்தம் இல்லை. மாறாக அது தேவனுடைய இரத்தம் என தேவன் ஒரு நாடகம் ஆடினர். யோசேப்பின் சகோதரர் தன் தகப்பனை வஞ்சிப்பதற்காக அந்த நாடகத்தை நடத்தினர். தேவன் சாத்தானை வஞ்சிப்பதற்காக அந்த நாடகத்தை நடத்தினார். என்ற உபதேசம். ஆக கல்வாரியில் இயேசு சிந்திய இரத்தம் ஒரு மனுஷனுடையது, தேவனுடையது அல்ல. தேவனுடையது என்பது ஒரு நாடகம். இது பரத்திலிருந்து நேரடியாக பட்டாபிராம் பாஸ்டர் பெற்ற ஒரு வெளிப்பாடாம்.

6. மற்றொரு வெளிப்பாட்டினால் வந்த போதனை, அவரது இரண்டாவது உபதேசம் என்னவென்றால்; ஆதாம் மற்றும் சர்ப்பம் அதாவது ஆதி. 3:1 ல் கூறப்பட்டுள்ள காட்டு ஜீவன் இருவரும் ஏதேனில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டனர். இது எப்படியெனில் ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதன் கனியை பறித்தாள், புசித்தாள், தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். அதாவது ஏவாள் அந்த காட்டு ஜீவனோடு உடலுறவு கொண்டு கர்ப்பந்தரித்தாள். ஆதாமும் அந்த காட்டு ஜீவனோடு உடலுறவு கொண்டான். அதாவது ஆதாம் ஓரினச்சேர்க்கையில் சர்ப்பத்தோடு ஈடுபட்டான். ஆக ஆணோடு ஆண் ஓரினச்சேர்க்கை ஏதேன் தோட்டத்திலே முதன் முதலாக நடந்தது. இது தான் ஏவாள் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் என்பதின் வெளிப்பாடாகும் என்கிறார். முடிவாக விபசாரம் ஏதேன் தோட்டத்தில் நடந்தது. அவ்வண்ணமாக ஓரினச்சேர்க்கையும் ஏதேன் தோட்டத்தில் நடந்தது என்கிறார். இது அவருக்கு பரத்திலிருந்து கிடைத்த ஒரு மாபெரிய வெளிப்பாடாம். இந்த வெளிப்பாடு சென்னையில் ஓடும் கூவம் ஆற்றில் தூக்கி எறிய தகுதி படைத்தது என்பது என்னுடைய கருத்து.

7. இந்த இரு வெளிப்பாடுகள் மற்றும் அதனை சார்ந்த உபதேசங்களில் கலக்கமுற்று, மனமுறிவடைந்து, ஆவியின் ஒருமைப்பாட்டை இழந்து சுமார் 12 குடும்பத்தினர், சொல்லப்போனால் சபையில் பாதிக்கு பாதி எண்ணிக்கையுள்ளவர்கள் வெளியே வந்துவிட்டனர். சபையில் மாபெரிய பிளவு ஏற்பட்டது. பாஸ்டருக்கு நெருக்கமான ஒரு சில குடும்பங்கள் அவரை ஒட்டிக்கொண்டு இருக்கின்றன. மேலும் அவர்களில் தன் உறவினரான

ஒரு குடும்பமும் உண்டு, அந்த குடும்பத்தை எவ்வகையிலும் வெளியே கொண்டு வரவேண்டும் என அந்த சகோதரன் போனில் என்னோடு பேசினார். அவர் முயற்சித்தபோது அந்த குடும்பம் எங்களுக்கு ஆதியில் இக்காலத்துக்குரிய செய்தியை குறித்து கூறியது, ஒரே தேவன் அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, ஒரே ஞானஸ்நானம் அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் போன்ற சத்தியங்களைக் கூறி எங்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தியது இந்த பட்டாபிராம் பாஸ்டர் தான். ஆதலால் நாங்கள் அவர் என்ன செய்ய சொல்கிறாரோ அதையே செய்வோம். அவர் எங்களுக்கு எதை உபதேசித்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருப்போம் என கூறுகிறார்கள், வஞ்சிக்கப்படுகிறார்கள். சகோதரனே இவர்களை எப்படியாவது வெளியே கொண்டுவர வேண்டுமென்று என்னிடம் புலம்பினார்.

8. நான் அடுத்த வாரம் என்னை நேரில் சந்தியுங்கள், இது குறித்து ஆலோசனை செய்து ஒரு முடிவு எடுப்போம் என்று கூறினேன். இந்த சகோதரனுடைய உறவினர் யூதாஸை மறந்து விட்டார். அவன் சுவிசேஷத்தை பிரசங்கித்தான். அற்புதங்களை நடப்பித்தான். ஆனால் அவன் ஒரு கேட்டின் மகனாகவே இருந்தான். ஒரு திருடனாகவே இருந்தான். நம்முடைய பாஸ்டரும் ஏன் அப்படி இருக்கக்கூடாது என்ற சிந்தனை அவர் உள்ளத்தில் எழும்பவில்லை. இதற்கிடையில் எனக்கு இந்த சகோ. எசேக்கியேல் யார் என திட்டவட்டமாக தெளிவாக தெரியாததால், பெரவலூர் சபையில் எனக்கு தெரிந்த சகோதரரை அணுகி அங்கே இந்த பெயரில் உள்ள சகோதரன் யார் என்ற விபரத்தை அறிந்து வரவும், அவருடைய தொலைபேசி எண்ணை வாங்கி வரவும் கூறினேன். அவர் பெரவலூர் சபையிலுள்ள எசேக்கியேல் என்ற ஒரு சகோதரனை சந்தித்து விவரம் கேட்க அவர் எனக்கு இந்த காலேப் யோசுவா யார் என்றே தெரியாது, இந்த பிரச்சனைக்கும் எனக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று கூறிவிட்டார். ஆனாலும் அவர் தொலைபேசி எண்ணை பெற்றுக்கொண்டு வந்தனர்.

9. நான் அந்த தொலைபேசி எண்ணில் அந்த எசேக்கியேல் சகோதரனுடன் பேச, அவரும் தான் முன் கூறியதையே என்னிடமும் கூறினார். மேலும் இவருடைய சத்தம், என்னோடு பேசிய சத்தத்தோடு மிகவும் வித்தியாசப்பட்டதாக இருந்தது. இதனால் யாரோ என்னிடம் இந்த பெரவலூர் எசேக்கியேல் சகோதரன் பெயரைச் சொல்லி பேசியிருக்கிறார்கள் என யூகித்துக் கொண்டேன்.

10. இப்படியாக ஆள்மாறாட்டம் செய்து எனக்கு போன் செய்யும் சம்பவங்கள் கடந்த ஆண்டு 2006 ல் அதிகமாக இருந்தது. கோவை ராஜாவின் ஏஜெண்டுகள் பலர் எனக்கு தங்களை பாஸ்டர்கள் என கூறிக்கொண்டும், விசுவாசிகள் என அழைத்துக் கொண்டும் எனக்கு போன் செய்து என்னுடைய உடல் நலன்கள் மற்றும் போக்குவரத்துக்களை அறிந்து கொண்டு பின் அவருக்கு தூது கொடுப்பார்கள். இப்படியாக இக்கடைசிகால செய்திக்குள் மக்கள் மத்தியில் பித்தலாட்டமும், சூதும், வஞ்சகமும் தான் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்வதைக் காண்கிறேன். உலகத்தானைவிட மோசமாக இருக்கிறார்கள்.

11. அடுத்தக் கட்டமாக பட்டாபிராம் சபையிலிருந்து வெளியேறிய ஒருவரை சந்தித்தேன். அவர் அந்த எசேக்கியேல் என்னும் நபர் என்னிடம் போனில் பேசிய காரியங்கள் யாவும் சரிதான் என்பதை ஒத்துக்கொண்டார். மேலும் தான் இந்த தவறான போதனைகள் குறித்து பட்டாபிராம் பாஸ்டரிடம் கேட்டபொழுது அவர் இந்த வெளிப்பாட்டை தான் தேவனிடத்திலிருந்து நேரிடையாக பெற்று உள்ளேன் என்று கூறினாராம். இல்லை, இது ஜோசுவா கமாலியேல் என்பவருடைய வெளிப்பாட்டுக்கு இணையான ஒரு வெளிப்பாடாக இருக்கிறதே என்று கேட்டதற்கு, அது அப்படியல்ல நான் தனிப்பட்ட முறையில் இந்த வெளிப்பாட்டை நேரிடையாக பரத்திலிருந்து பெற்றேன். சபையாராகிய நீங்கள் உங்கள் பாஸ்டர் பரத்திலிருந்து பெற்ற வெளிப்பாட்டை ஏற்றுக் கொள்வது, ஏற்றுக்கொள்ளாதது உங்களது விருப்பம். இந்த வெளிப்பாட்டை ஏற்றுக் கொள்ளாதவர்கள் சபையிலிருந்து பிரிந்து செல்லலாம் எனக்கூறி, நான் ஒரு மிலிட்டரி கமாண்டர், விசுவாசிகளாகிய நீங்கள் சிப்பாய்கள். ஆதலால் நீங்கள் என் சொல் கேட்டுத்தான் ஆகவேண்டும். உங்களுக்கு என் சொல் கேட்க விருப்பம் இல்லையென்றால் என் சபையை விட்டு விலகலாம். மேலும் நாம் கூடி வரும் இடம் என் சொந்த வீடு. இது சபைக்கடுத்த கட்டிடம் அல்ல. என் சொந்த வீட்டில் தான் நீங்கள் கூடி வருகிறீர்கள். உங்களுக்கு என் உபதேசம் பிடிக்காவிட்டால் இங்கேயிருந்து வெளியேறுங்கள் என்று கூறிவிட்டார். ஆதலால் நாங்கள் சுமார் 12/13 குடும்பங்கள் வெளியே வந்து மற்றோர் இடத்தில் ஆராதனை செய்து வருகிறோம் என்று கூறினார். ஆக எனக்கு எசேக்கியேல் என்ற சகோதரன் கூறியதும், பட்டாபிராம் சபையிலிருந்து வெளியேறிய சகோதரன் கூறியதும் ஒன்றாகவே இருந்தது. தற்போது எலிசா என்ற சகோதரன் தலைமையில் பிரிந்து வந்தவர்கள் கூடி ஆராதனை செய்து வருவதாக கேள்விப்பட்டேன். நல்லது.

12. பட்டாபிராம் சபையினர் கூடிவரும் இடம் பாஸ்டரது சொந்த பணத்திலிருந்தும், அவர் வெளிநாட்டு ஊழியக்காரர்களிடமிருந்து பெற்ற உதவிகளைக் கொண்டும் கட்டியது தான் உண்மை என அவர் கூறினார். பாஸ்டர் வீடு முற்றிலுமாக அவர் சொந்த பணத்தினால் கட்டப்படவில்லை எனத் தெரிகிறது. மேலும் பொதுவாக சொந்த வீடு கட்ட யாரும் பண உதவி செய்வதும் இல்லை. சபைக்கு கட்டிடம் கட்ட எனக்கூறி பொருளாதார உதவிகளைப் பெற்று பின் அந்தக் கட்டிடத்தை தன் சொந்த வீடாக பாவிக்கும், கட்டிடம் மீது முழு உரிமைக் கொண்டாடும் வஞ்சகர்கள்தான் நம் மத்தியில் அதிகம், அதிகம். விசுவாசிகள் ஏமாளிகள். என்ன செய்வது? ஏமாளிகள் இருக்கும்போது ஏமாற்றுக்காரனுக்கு கொண்டாட்டம் தானே. நம்ம பாஸ்டர்களுக்கும் கொண்டாட்டம் தானே.

13. பெரவலூர் சபை கூடிவரும் இடம் அதன் பாஸ்டருடைய சொந்த பணத்தைக் கொண்டு முழுவதுமாக கட்டப்படவில்லை. அவ்வாறாகவே வளசரவாக்கத்தில் கட்டப்பட்ட சபை மற்றும் அதனைச்சார்ந்த வீடு, கீழ்பாக்கத்தில் கட்டப்பட்ட சபை மற்றும் பாஸ்டரது வீடு, அவ்வண்ணமாகவே **ஆரவாரம்**, நடுவீரப்பட்டு சபையும். இப்படி பொதுப்பணத்தினால், வெளிநாடுகளிலிருந்து பெற்ற உதவியினால், விசுவாசிகளின் தசமபாகம் மற்றும் சபைக்கடுத்த காணிக்கைகளினால் சபைகட்டிடங்களையும், வீடுகளையும் கட்டி, அந்த ஆஸ்திகளின் மேல் முழு உரிமைக்கொண்டாடும் பாஸ்டர்களே உங்களுக்கு ஐயோ! முதலில் நீங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரர்கள் அல்லவே அல்ல. மாறாக நீங்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்கள். இதை அறிந்து கொள்ள இயலாத, வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத ஜனங்களின் கண்கள் திறக்கப்படாதா? இந்த குருடர்களான ஜனங்களுக்காக நான் பரிதபிக்கிறேன், என் உள்ளம் வேதனைப்படுகிறது. ஒரு காலத்தில் ஜெர்மனி சகோதரர் கெர்ட் ரோடேவால்ட் (Bro. Gerd Rodewald) யிடம் பண உதவி பெற்று கட்டிய சபை கட்டிடத்துக்குள் என்னை இருக்க விடாது, இது என் சபை, இதை விட்டு வெளியேறு என்று அந்நாட்களில் என்னை

வெளியேற்றியவர் பாஸ்டர் S. ரவீந்திரராஜ். இவர் மறைந்த பாஸ்டர் S.P. ஜான் சாமுவேல் அவர்களின் ஆருயிர் நண்பன் மற்றும் இவர்கள் முக்காடு தீவிரவாதிகள்.

14. ஒரு முறை எனக்கு அறிமுகமான ஒரு ஐசுவரியவானை சந்தித்து குமரி மாவட்டம், புதுக்கடை பாஸ்டர் F. கலிஸ்தராஜ்க்கு (இந்நாட்களில் இவர் மல்டி லெவல் மார்கெட்டிங் சாதனை மன்னன், லட்சாதிபதி – மும்பை பாஸ்டர் டேனியல் கிறிஸ்டியானின் பக்தன்) சபைகட்டிடத்திற்கு பண உதவி செய்ய முடியுமா என்று பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் ஒரு நலமான, ஆரோக்கியமான காரியத்தைக் குறித்து என்னிடம் பேசினார். அவர் பேசியதில் நூற்றுக்கு நூறு சதவீதம் உடன்பாடு எனக்கு இருந்தது. அவர் கூறியதாவது இந்த பாஸ்டருக்கு ஒரு சபை கட்டிடம் கட்டிக் கொடுக்க பண உதவி என்னால் செய்ய முடியும். ஆனால் நான் அந்த உதவியை செய்யமாட்டேன். ஏனென்றால் பாருங்கள், C.S.I. , C.P.M. , A.G. , போன்ற ஸ்தாபனங்களுக்கு ஆலயம் கட்ட நான் உதவிகள் பல இலட்சங்கள் செய்கிறேன். ஆனால் தனிப்பட்ட நபர் சபை கட்டிடம் கட்ட உதவிகள் எதுவும் செய்யமாட்டேன் என்றார். நான் ஸ்தாபன சபைகள் கட்டிடம் கட்ட பல இலட்சங்கள் உதவி செய்தால் அது அந்த ஸ்தாபனத்தின் சொத்து ஆகிறது. அது பொது சொத்தாக மாறுகிறது. அதில் தனிப்பட்ட நபர்களுக்கு உரிமையில்லை. ஆனால் நீங்கள் கேட்கும் பாஸ்டர்களை போன்றவர்களுக்கு நான் உதவி செய்தால் அது ஒரு தனிப்பட்ட நபருடைய சொத்தாக மாறுகிறது. நான் ஏமாளியாக இருக்க விரும்பவில்லை என்றார். ஆம் அது நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மைதான். இவர்கள் பொது மக்களிடமிருந்து நன்கொடைகள், சபைவிசுவாசிகளிடமிருந்து தசமபாகம் மற்றும் காணிக்கை, வெளிநாடு சகோதரரிடமிருந்து அன்பளிப்பு, சபைக்கு கட்டிடம் கட்ட என்பதின் பெயரில் பெற்று , கட்டிடம் கட்டி பின் அதை தங்கள் சொத்தாக மாற்றிவிடுகிறார்கள். இது என்ன? பகல் கொள்ளை, வஞ்சகம், சூது, மாய்மாலம் தானே. இதில் உங்கள் மத்தியில் உள்ள அநேக பாஸ்டர்களுக்கு பங்கு உண்டே. இவர்கள் கள்ள கபடமுள்ள வேலையாட்களே. இவர்களையும் சார்ந்து நீங்கள் இருப்பீர்களானால் அது உங்களுக்குத்தான் வெட்கக்கேடு.

15. பாருங்கள், நீங்கள் மும்பை பாஸ்டர் டேனியல் கிறிஸ்டியானை நன்கு அறிவீர்கள். தனது அரசாங்க வருமானத்திற்கு மேலாக ஊழியத்தின் பாதையில் கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொண்டும் விசுவாசிகளின் காணிக்கைகளைக் கொண்டும் தனக்கு சொத்து சுகங்களை அதிகமாக தேடிக்கொண்டார். ஒரே தேவன், ஒரே ஞானஸ்நானம் குறித்து நன்கு போதிப்பவர் தான். இதை யூதாசும் போதித்தான். இக்காலத்துக்குரிய செய்தியில் இருப்பதாக நடித்தார். இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள மக்களைக் கொண்டு இலட்சக்கணக்கில் பணம் சம்பாதித்தார். இவருடைய எளிமை மாறி, மாறி பந்தா வாழ்க்கை ஆரம்பமானது. இவருக்கு காலில் சாக்ஸ் மாட்டிவிட ஒரு ஆள். ஷூ மாட்டிவிட மற்றொரு ஆள். கோட் அணிந்து விட மற்றொரு நபர் என பந்தா வாழ்க்கையை ஊழியத்தின் வாழக்கையில் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. சபையில் பலர் விழித்துக் கொண்டனர். இவரது ஊழியம் பிசாசினுடையதே என்பதை புரிந்து கொண்டனர். சபை உடைய ஆரம்பித்தது. இந்நாட்களில் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள மக்களில் இவரை தேடுவார் யாருமில்லை. இவரை எடுத்து உபயோகிக்க யாரும் முன்வரவில்லை. ஊழியம் முடியுமளவுக்கு நெருக்கம் வந்தது. உடனே தன் திசையை மாற்றினார். **இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட சபை** என்ற ஸ்தாபன சபையை மற்றும் தீர்க்கத்தரிசியை ஏற்றுக்கொள்ளாத ஒரே தேவன் மற்றும் ஒரே ஞானஸ்நானம் விசுவாசத்தில் உள்ள சபைகளை பற்றிக்கொண்டார். இவர்கள் தீர்க்கதரிசியின் செய்தியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், பிரசங்கிக்க இவரை அனுமதிக்கவுமாட்டார்கள். தற்போது அவர்களுடன் கைகோர்த்து சம்பாத்தியத்திற்கு வழியை தேடிக்கொண்டார். பணத்திற்காக இவர் எதையும் செய்வார். இவருக்கு தேவையெல்லாம் பணம், பிரசங்கபீடம், புகழ். இவரையும் சார்ந்து இன்னும் ஒரு கூட்டம் இருக்கிறதே என்பதை அறிந்து, என் உள்ளம் வேதனைப்படுகிறது. நம் ஜனங்கள் இந்த அளவுக்கு ஏமாளிகளாயிருக்கிறார்கள் என்பதை நினைத்து அவர்களுக்காக நான் பரிதபிக்கத்தான் வேண்டியதாயிருக்கிறது.

16. கடைசி கால செய்தியில் இருக்கிறோம், நாங்கள் மணவாட்டியை வழிநடத்துகிறோம் எனக்கூறும் எனது நண்பர்களே நீங்கள் நான் மேற்கூறிய விதமாக உங்கள் சபை கட்டிடத்தை கட்டி, அவைகளை உங்கள் பேரில் தக்கவைத்து கொள்கிறீர்களே, உபதேசத்தில் அடிக்கடி நீங்கள் உங்கள் திசையை மாற்றி மாற்றி வருகிறீர்களே, பணம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு ஊர்சுற்றித் திரிகிறீர்களே, உங்களுக்கு இது சரியா? நாணயமா? தேவனுக்கு முன்பாக மட்டுமல்ல ஜனங்களுக்கு முன்பதாகவும் நீங்கள் யோக்கியமானதை செய்ய நாடுங்கள். நீங்கள் உங்கள் மாயையான வாழ்க்கையிலிருந்து வெளிவந்து, நீங்கள் பொதுப் பணத்திலிருந்து கட்டிய உங்கள் கட்டிடங்களை பொது உடமையாக்கமாட்டீர்களா? நீங்கள் தேவனுடைய உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனாயிருப்பீர்களானால் மனந்திரும்பி இதைச்செய்வீர்கள். மற்றபடி உங்கள் இருதயம் இறுமாப்புக் கொண்டிருக்கும். உங்கள் இருதயத்தை கடினப்படுத்துவீர்கள். அப்படியானால் உங்களுக்கு ஐயோ!

17. இப்பொழுது பட்டாபிராம் பாஸ்டரது மாறுபாடான, துர்உபதேசங்களைக் குறித்து இங்கு தியானிப்போம். இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளவர்களுக்கு இயேசு யார் என்று நன்றாகத் தெரியும். அவர்கள் அந்த வெளிப்பாட்டையுடையவர்களாக இருக்கிறார்கள். பழைய ஏற்பாடு யெகோவா புதிய ஏற்பாடு இயேசுகிறிஸ்து. இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். இவர் ஆண் பெண் மாம்ச இச்சையினால் உண்டானவர் அல்ல. மாறாக தேவன் மரியாளின் கர்ப்பத்தில் தம்மில் தாமே ஒரு சரீரத்தை உடையவராகப் பிறந்தார். பாருங்கள், தேவன் ஒரு ஆவி. இவர் சர்வ வியாபி. இந்த சர்வ வியாபி தேவன் என்று அறியப்படும் பொருட்டு, எதுவும் சிருஷ்டிக்கப்படுமுன் தனக்கென்று ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை உடையவரானார். இந்த சரீரம் தான் **வார்த்தை / Logos** என்பது உங்களுக்கு தெரியும். வார்த்தை காணக்கூடாத எங்கும் வியாபித்திருக்கும் தேவனுடைய மானிட சாயலான ஒரு ஆவிக்குரிய மகிமையின் சரீரம். இதைத்தான் யோவான் ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது, அந்த வார்த்தை மாம்சமானது என்கிறான். பவுல் தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் என்கிறான். பாருங்கள் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு, தமது இரத்தத்தை சிந்தினார். மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுக்கு இயேசு என்று பெயரிடப்பட்டது. இப்படியிருக்க இயேசுவின் இரத்தம் தேவனுடையது அல்ல என்று எப்படி கூறமுடியும்?

18. தேவன் மாம்சத்தில் ஏன் வெளிப்படவேண்டும்? நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பாவங்களுக்காக தம்மைதாமே கல்வாரியில் சிலுவையில் ஒப்புக்கொடுத்து தமது இரத்தத்தை சிந்தினார். குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நாம் மீட்கப்பட்டோம். **(1பேதுரு1:19)** நம்முடைய பாவத்திலிருந்து நாம் மீட்கப்பட தமது இரத்தத்தை சிந்தினார். நம்மை

மீட்டார். ஏனென்றால் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. நம்முடைய பாவங்களுக்கு பரிகாரமாக தம்முடைய இரத்தத்தை சிந்த, ஆவியாகிய தேவன் மாம்சமாகி, மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்.

19. ஏதேன் தோட்டத்தில் உண்டான பாவம் இரத்த சம்பந்தமானது. அங்கு ஆதாமின் மனைவியாகிய ஏவாளுக்கும், அந்தக் காட்டு ஜீவனுக்கும் இடையில் விபசாரம் நடந்தது. விபசாரம் இரத்த சம்பந்தமான பாவம். ஆதி நாட்களில் தேவனுடைய பிரமாணம் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல். அதன்படி தேவன் இரத்தசம்பந்தமான அந்த பாவத்தில் உள்ள ஜனங்களை மீட்க தமது இரத்தத்தை சிந்தவேண்டியதாயிற்று. ஆம் இரத்தத்திற்கு இரத்தம் மனுஷர்கள் தங்களுடைய இரத்தத்தை கிரயமாக செலுத்த முடியாது. ஏனென்றால் அவர்கள் பாவத்தில் பிறந்தவர்கள். குற்றமற்ற இரத்தம் பரிகாரமாக தேவை. ஆதலால் ஆவியாகிய தேவன் மாம்ச சரீரத்தை உடையவரானார். அந்த சரீரம் யோசேப்பு, மரியாளைக் கொண்டு உருவாகவில்லை. அவர்கள் இருவருக்கும் அந்த சரீரத்துக்கும் சம்மந்தமில்லை. மரியாள் அந்த சரீரத்தை தன் கர்ப்பத்தில் சுமந்தாள், காத்தாள். அத்துடன் அவள் பணி முடிந்தது. தேவன் தம்முடைய சரீரத்தை மரியாளின் கர்ப்பத்தில் ஆயத்தமாக்கினார், சிருஷ்டித்தார். அந்த சரீரத்தில் ஓடிய இரத்தம் அவருடையது. அதில் யோசேப்புக்கோ, மரியாளுக்கோ பங்கு இல்லை. காலம் நிறைவேறினபோது தம்முடைய இரத்தத்தை கல்வாரியில் சிந்தி தம்முடையவர்களை மீட்டார். அந்த சரீரத்துக்குரியவரான இயேசு வேறு யாருமில்லை, அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்.

**20. மாம்சத்தின் உயிர் இரத்தம். உங்களுக்கு உயிராயிருக்கிறது உங்கள் இரத்தம். ஆதி. 9:4,5. மாம்சத்தின் உயிர் இரத்தமாயிருக்கிறது. லேவி 11:11. சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிர். இரத்தம் ஜீவனுக்கு சமானம். லேவி 17:14. இரத்தமே உயிர் உபா. 12:23. வார்த்தை தேவன். வார்த்தை மாம்சமானது. அதாவது தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். அப்படியானால் அந்த மாம்சத்தின் உயிர் தேவனுடைய இரத்தம். அப்படியாயின் அந்த இரத்தம் வார்த்தையாகிய தேவனுடையது தானே. அந்த இரத்தத்தில் தானே அவருடைய ஜீவன். அந்த ஜீவனைத் தானே நமக்கு கொடுத்தார். அதாவது தம்முடைய இரத்தத்தை சிந்தி, தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்தார். அப்படியாயின் கல்வாரியில் இயேசு சிந்திய இரத்தம் தேவனுடையது அல்ல என்று எப்படி கூறமுடியும்? ஆம் தேவனுடைய இரத்தம் நமது ஆத்துமாவுக்காக பாவ நிவிர்த்தி செய்கிறது. லேவி 17:11. தேவன் தேவதூதர்களுக்காக மரித்து இரத்தம் சிந்தவில்லை. கேரூபீன்களுக்காகவும், சேராபீன்களுக்காகவும் மரித்து இரத்தம் சிந்தவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு இரத்தம் கிடையாது. ஆக தேவன் பாவிகளாகிய நமக்கு தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை அவருக்கென மீட்டுக்கொண்டார்.**

21. இயேசு நம்மைப்போன்று இனச்சேர்க்கையில் பிறந்தவரல்ல. நம்முடைய தாய் நம்மை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். ஆனால் இயேசுவினுடைய இரத்தம் குற்றமற்றது. பவுல் தேவன் தம் சுய இரத்தத்தினால் சம்பாதித்த சபை என இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்களை குறித்து எழுதுகிறான். அப்.20:28. அந்த மந்தையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியே ஒருவனை கண்காணியாக வைக்கவேண்டும். ஆனால் இன்று கள்ள கபடமுள்ள வேலையாட்கள், ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு, சாத்தானின் பணியாட்களாக இருந்துகொண்டு, கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக நடித்து மக்களை வஞ்சித்து வருகிறதினால் தான் வெளிப்பாட்டின் பேரில் மேற்கண்ட உபதேச குழப்பம். மேலும் பவுல் தான் போனபின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் மந்தைக்குள்ளே வரும். சிலர் எழும்பி மாறுபாடானவைகளை போதித்து, சீஷர்களை தங்களிடம் இழுத்துக் கொள்வார்கள் என்கிறான். அவர்கள் தான் இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள், போலிகள், ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள்.

22. தேவனுடைய இரத்தம் கல்வாரியில் சிந்தப்பட்டது உண்மைதான். பாருங்கள் இது குறித்து யோவான் கீழ்கண்ட வாறு சாட்சி கொடுக்கிறான். போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தம் புறப்பட்டது. அதைக் கண்ட யோவான் சாட்சிக்கொடுக்கிறான். அவனுடைய சாட்சி மெய்யாய் இருக்கிறது. நாம் விசுவாசிக்கும்படி அவன் சொல்லுகிறது மெய் என்று அவன் அறிந்திருக்கிறான். யோ. 19:34,35.

23. இயேசு கல்வாரியில் சிந்திய இரத்தம் குறித்து பவுல், அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. (கொலோ. 1:14) அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் சமாதானத்தை உண்டாக்கினார். (கொலோ. 1:20) எனவும் அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது என்கிறான். (எபே.1:7) தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் வேறு யாரும் கிடையாது. ஆம், கிறிஸ்து கல்வாரியில் தமது இரத்தத்தை சிந்தி நமது பாவங்களை மன்னித்தார். கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தினாலே ஒரு தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டுபண்ணினார் எனவும் (எபி. 9:12) மேலும் இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே , நம்முடைய பாவங்களற நம்மை கழுவி தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினார் என வெளி. 1:6 ல் வாசிக்கிறோம். அக்காலத்திலே இயேசு கிறிஸ்துவை சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிகளுக்கு புறம்பானவர்களும் இப்பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானார்கள் என பவுல் எழுதுகிறான். (எபே.2:12,13)

24. யோவானும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்கிறான். (1யோ.1:7) இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது என பவுல் கூறுகிறான். (எபி. 9:22) ஆக கல்வாரியில் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது. அது தேவனுடைய இரத்தம். நாம் பாவிகளாய் இருக்கையில் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார். நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். ரோ. 5:8,9

25. முடிவாக உங்கள் பாஸ்டர்கள் (கள்ள கபடமுள்ள வேலையாட்கள்) தங்கள் மனம் போன போக்கிலே போய் சீர்கெட்டு அலைகிறார்கள். ஆதலால் சபைகள் உடைகிறது அது வரவேற்கத்தக்க ஒன்றே. ஏனென்றால் அவர்கள் யார் என்று சபை காண அவர்கள் முகத்திரைகள் கிழிக்கப்படுகிறது. **தேவன் தொழுகைக்குரியவர். ஒரே தேவன் உண்டு என நாம் விசுவாசிக்கிறோம். எபி. 1 வது அதியில் தேவதூதர்கள் கிறிஸ்துவை தொழுது கொண்டதை நாம் காண்கிறோம். ஸ்தேவான் அவரை தொழுதுகொண்டான். அப்.7:59 4 ஜீவன்களும் 24 மூப்பர்களும் அவரைத்**

தொழுது கொண்டார்கள். வெளி. 5:14 கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தொழுகைக்குரியவரானால் அவர் தேவன், அவருடைய இரத்தம் தேவனுடையதே.

26. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கும்போது, அந்த சரீரத்தின் மாம்சத்தின் உயிராகிய இரத்தம் யாருடையது? நிச்சயமாக அது தேவனுடையதே. கிறிஸ்து தேவனே யன்றி வேறுயாருமில்லை. கர்த்தராகிய கிறிஸ்து தான் தாவீதின் ஊரிலே பிறந்தார். இவர் தான் இயேசு. இவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். இவர் மாம்சமாகிய வார்த்தை. ஆக கல்வாரியில் சிந்தப்பட்டது தேவனுடைய இரத்தமே. பிரியமானவர்களே பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை பிசாசு சீர்குலைக்காதபடிக்கு உங்களை காத்துக்கொள்ளுங்கள். தேவன் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நித்திய மீட்பை நமக்கு உண்டுபண்ணினார். தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக ஆமென்!

27. பட்டாபிராம் பாஸ்டர் மற்றும் மிலிட்டரி கமாண்டரின் இரண்டாவது போதகத்துக்கடுத்த துர்உபதேசம் என்ன? ஏதேன் தோட்டத்தில் தேவகுமாரனாகிய ஆதாம் தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் தந்திரமுள்ளதாய் இருந்த சர்ப்பத்தோடு, ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டு, ஆணோடு ஆண் அவலட்சணமானதை நடப்பித்தான் என்பதாகும்.

28. தேவனாகிய கர்த்தர் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். (ஆதி.1:27) பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் என்று காண்கிறோம். (ஆதி.2:7) பின்பு தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார் எனவும், தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் என ஆதி.2:8,15 வது வசனங்களில் காண்கிறோம்.

29. பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் எனக் கூறி, தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார் எனவும், ஆதாம் இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் **மனுஷி** என்னப்படுவாள் என்றான். ஆதாமும் அவன் மனைவியாகிய ஸ்திரீயும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள் எனவும் ஆதி.2:18–25 வசனங்களில் காண்கிறோம். இன்னும் ஆதாமின் மனைவி ஏவாள் என்று அழைக்கப்படவில்லை. மனுஷி அல்லது ஸ்திரீ என்றே அழைக்கப்படுகிறாள்.

30. சர்ப்பத்தை குறித்து; அந்த காட்டு ஜீவன் மனுஷனுடன் மிக்க நெருக்கமான தொடர்புடையதாக இருந்தது, அது மனுஷனைப்போன்று நிமிர்ந்து நடக்கக்கூடியதும், பேசக்கூடியதும், இதின் இரத்தம் மனுக்குலத்துடன் கலக்கக்கூடியதாகவும் இருந்தது. ஆதலால் தான் அந்த காட்டு ஜீவன் ஏவாளை வஞ்சிக்கவும் அவளோடு சயனிக்கவும் முடிந்தது என்று இக்காலத்துக்குரிய செய்தி கூறுவதைக் காண்கிறோம். இந்த உறவினால் தான் காயீன் பிறந்தான் எனவும் பார்க்கிறோம். தேவனால் சபிக்கப்பட்டபின்பு தான் இந்த காட்டு ஜீவன் சர்ப்பமானது என்றும் காண்கிறோம். ஏவாளோடு இடைபடும்போது இது ஒரு மகா தந்திரமுள்ள காட்டு ஜீவனாகவே இருந்தது.

31. இப்பொழுது நமது பட்டாபிராம் பாஸ்டரது வெளிப்பாட்டிற்கு தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் எங்கும் இடமில்லை. சர்ப்பம் (காட்டு ஜீவன்) ஏவாளை வஞ்சித்தது. ஏனென்றால் அவள் மூலசிருஷ்டிப்பில் இல்லை. மூலசிருஷ்டிப்பில் உள்ள எதுவும் வஞ்சிக்கப்படாது. சாத்தான் ஏவாளை அறிந்தான். ஏவாள் கர்ப்பந்தரித்தாள். காயீனைப் பெற்றாள். தேவகுமாரனாகிய ஆதாம் மாம்ச இச்சைக்கு அப்பாற்பட்டவனாக இருந்தான். அவனை எதுவும் வஞ்சிக்க முடியாது. ஏனென்றால் அவன் மூலசிருஷ்டிப்பில் உள்ளான். தன் மனைவியாகிய ஏவாளின் இச்சையினால் அவன் ஏவாளைச் சேர்ந்தான். ஆதாம் மாம்ச இச்சைக்குட்படவில்லை. ஏவாளின் இச்சையில் பங்கு கொண்டான். அதன் பலனாக ஆதாமினால் ஸ்திரீ கர்ப்பந்தரித்தாள். ஆபேலை பெற்றாள். அதாவது அடுத்து அடுத்து இருவரால் ஏவாள் கர்ப்பவதியானாள். முதலில் காட்டு ஜீவனால், பின்பு ஆதாமினால். இதன் பலனாக முதலில் காயீனைப் பெற்றெடுத்தாள். பின்பு ஆபேலை பெற்றெடுத்தாள். காயீன் பொல்லாங்கானால் உண்டானவன். (1யோ.3:12) ஆபேல் தேவகுமாரனாகிய ஆதாமினால் உண்டானவன். (லூக் 3:38)

32. ஆதாம் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு பலுகிப் பெருக சிருஷ்டிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டான். பாருங்கள், தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. அதைப்போன்று தான் ஆதாம் பலுகிப் பெருக ஆசீர்வதிக்கப்பட்டான். பாருங்கள், இயேசு இது குறித்து கூறுவதை: இந்த மலையைப்பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மத்.21:21. ஆம், ஏதேன் தோட்டத்தில் ஆதாம் கட்டளையிட அது நடக்கும். அனைத்து சிருஷ்டிப்பும் அவன் ஆளுகையின் கீழ் இருந்தது. ஒரு காட்டு ஜீவனைப்பார்த்து நீ இங்கே வா, மற்றும் நீ அங்கே போ என்று கட்டளையிட அது கீழ்படியும். ஒரு மரத்தைப்பார்த்து இங்கிருந்து பெயர்ந்து அங்கே போய் நில் என்று கூற அது அப்படியே ஆகும். பாருங்கள், யோசுவா சூரியனே, நீ கிபியோன் மேலும், சந்திரனே நீ ஆயலோன் பர்வதத்தின் மேலும் தரித்து நில்லுங்கள் என்றான். சூரியன் தரித்தது. சந்திரன் நின்றது. (யோசு.10:12,13) இது தான் அது.

33. இப்பொழுது ஆதாம் ஸ்திரீயின் மாம்ச இச்சையில் பங்குபெற்றான். இந்த இச்சையை அவள் அந்த காட்டு ஜீவனாகிய சர்ப்பத்தினிடமிருந்து பெற்றாள். ஆதாமுக்கு இது தவறு என்று தெரியும். ஆனாலும் அவளுடைய ஆசைக்கு உட்பட்டான், இணங்கினான். இயேசு கிறிஸ்து பாவம் அறியாதவர். நமக்காக பாவமானார். அதுபோன்று ஆதாம் பாவமறியாதவன். ஏவாளுக்காக, தன் மணவாட்டிக்காக பாவமானான். அவர்கள் தேவன் நியமித்த முறைமைக்கு மாறாக செயல்பட்டு பலுகிப்பெருக ஆரம்பித்தார்கள். அன்று முதல் இன்று வரை மாம்ச இச்சையினிமித்தமாகவே ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் சயனிக்கிறார்கள். அதன் நிமித்தமாகவே குழந்தைகள் பிறந்து அவர்கள் பலுகிப்பெருகுகிறார்கள். ஆனால் அது ஆதியில் தேவசித்தம் அல்ல. பாருங்கள், கண்களின்

இச்சையும், மாம்சத்தின் இச்சையும் பிதாவினால் உண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். (1யோ. 2:14) இது தான் இக்காலத்துக்குரிய செய்தியில் நாம் கண்ட வெளிச்சம், வெளிப்பாடு.

34. பட்டாபிராம் பாஸ்டரது வெளிப்பாடு இக்காலத்துக்குரிய செய்தியில் நமக்கு கிடைத்த வெளிப்பாட்டையும், மிஞ்சிப் போகிறது. ஆதாம், அந்த காட்டு ஜீவனோடு, அதாவது சர்ப்பத்தோடு, ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டிருக்கமுடியாது. முடியவே முடியாது ஐயா! ஏனெனில் ஆதாம் தேவகுமாரன். தேவகுமாரன் ஒரு ஆண்புணர்ச்சிக்காரனாக இருக்கமுடியாது. அதாவது ஒரு ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுகிறவனாக இருக்க முடியாது. இந்த ஆதாம் இயேசுவுக்கு முன் அடையாளமானவன். (ரோ.5:14) இயேசுவுக்கு முன் அடையாளமானவன் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டால் அது இயேசுவையும் ஓரினச்சேர்க்கைக்குரியவராக்கிவிடும்.

35. ஆதாம் தேவனிடமிருந்து நேரிடையாக வந்தவன். அவன் தேவகுமாரன். அவன் தேவனால் சிருஷ்டித்து உருவாக்கப்பட்டவன். அவன் தேவனுடைய சுபாவத்தை உடையவன். தேவன் போன்று ஆளுகை கொண்டவன். பாருங்கள், ரோ.1அதி. என்ன கூறுகிறது? தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், அவரை ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்தைகளினாலே வீணரானவர்கள். தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார் எனக் காண்கிறோம். மேலும் ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பிக்க தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார் எனக் காண்கிறோம்.

36. அப்படியானால் தேவகுமாரன், தேவசாயலாக, ரூபமாக சிருஷ்டிக்கப்பட்டவனாகிய ஆதாம் தேவனை அறிந்து, அவரை தேவன் என்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலும் இருந்தவனா? அவன் அக்கிரமசெய்கைகாரனா? ஆதி.19:7, 1தீமோ.1:9–11. அவன் பேலியாளின் மகனா? நியாதி 19:22. ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை என்று 1 தீமோ. 2:14 கூறும்பொழுது ஆதாம் எப்படி ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டிருக்கமுடியும்? வஞ்சிக்கப்பட்டிருக்க முடியும்? முடியவே முடியாது! ஓரினச்சேர்க்கை அவனை வஞ்சிக்கப்பட்டவனுக்குள்ளாக்கி இருக்குமே! ஆதாம் ஏதேன் தோட்டத்தில் தேவசந்நிதியில் தேவனோடு உறவாடினவன் அல்லவா? தேவன் தம்முடைய குமாரனை அந்த அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்க முடியுமா? அப்படியானால் தேவனுடைய குமாரன் தேவனுடைய இராஜ்ஜியத்துக்கு புறம்பானவனா? தேவன், ஆதாமை தம்முடைய குமாரனை அவலட்சணமானதை நடப்பிக்க ஒப்புக்கொடுப்பாரா? அவர் அப்படி ஒருகாலம் செய்யமாட்டார். தேவனுடைய குடும்பத்தில், அவர் குமாரன் ஒரு ஆண்புணர்ச்சிக்காரனாக, ஓரினச்சேர்க்கை கொண்டவனாக இருக்கமுடியுமா? சற்று சிந்தித்துப்பாருங்கள்! உங்கள் சிந்தனையில் பிசாசுக்கு இடங்கொடுக்காதீர்கள். ஆக பட்டாபிராம் பாஸ்டர் வெளிப்பாடு பிசாசு அவருக்கு கொடுத்த வெளிப்பாடேயன்றி, பரத்திலிருந்து அவர் பெற்ற ஞானம் அல்ல.

37. பிரியமானவர்களே நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித் திரிகிறான். நீங்களோ உங்கள் விசுவாசத்தில், தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் உறுதியாய் இருந்து பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். பட்டாபிராம் பாஸ்டரது உபதேசத்துக்கு எதிர்த்து நில்லுங்கள். அதோடு மட்டுமல்ல தன்னைத்தானே ஊரீம், தும்மீம் கொண்ட ஏழாம் தூதன் என்று அழைத்துக் கொண்டு இரட்சிக்கப்படாத தன் குடும்பத்திலிருந்து பிரிந்து MMTA பகுதியை மையமாகக் கொண்டு ஊர்வலம் வரும் பிசாசானவனின் மற்றொரு சாயலாகிய சாகுல் ஹமீது என்ற ஜோசுவா கமாலியேலையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தவிரும்புகிறேன். இவரும் பாஸ்டர் பட்டாபிராம் வழிதான். இவரது வெளிப்பாடு குறித்தும் சற்று தியானிப்போம்.



நீங்கள் மேலே காண்பது சாகுல் ஹமீது தன் வெளிப்பாட்டை விளக்க வரைந்துள்ள படம்.

38. ஏதேன் தோட்டத்தில் ஜீவ விருட்சம் ஆதாம் மற்றும் ஏவாள் என்கிறார். நன்மை தீமை அறியத்தக்க விருட்சமானது ஆண் மற்றும் பெண் சர்ப்பம் என்கிறார். அதாவது தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களிலும், தந்திரமுள்ளதாக இருந்த காட்டு ஜீவன் ஆண் மற்றும் பெண் சர்ப்பம் என்கிறார். (ஆனால் வேதவாக்கியமோ ஜீவவிருட்சம் மற்றும் காட்டு ஜீவன் – சர்ப்பம் என்று ஒருமையாய் கூறுகிறதேயன்றி பன்மையில் கூறவே இல்லை. ஆக ஆண் மற்றும் பெண் என்ற பன்மைக்கு அங்கு இடமே இல்லை.) ஆதாமுக்கு பின், ஏவாளுக்கு முன் கர்த்தர் இந்த ஆண் மற்றும் பெண் காட்டு ஜீவனை அதாவது ஆண் மற்றும் பெண் சர்ப்பத்தை மண்ணினால் உருவாக்கினார் என்கிறார். தேவன் ஆதாமையும் ஏவாளையும் (ஜீவவிருட்சம்) மண்ணினால் தனித்தனியாக உருவாக்கவில்லை. ஆதாமை மட்டுமே உருவாக்கினார். அவனுக்குள் ஏவாள் இருந்தாள். அதுதான் உண்மை. ஒரு நாள் இந்த ஆண் மற்றும் பெண் சர்ப்பத்தை அதாவது காட்டு ஜீவனை ஆதாம் எதிரில் தேவன் நிறுத்தி நன்மை தீமை அறியத்தக்க இந்த பெண் சர்ப்பத்துடன் நீ சயனிக்க வேண்டாம். அதாவது நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். நீ பெண் காட்டு ஜீவனுடன் சயனிக்கும் நாளில் சாகவே சாவாய். அதாவது நீ நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டாராம். அதுதான் ஆதி 2:17 ன் கருத்தாம். நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் அந்த பெண் சர்ப்பம் என்றால் அந்த ஆண் சர்ப்பம் யார்? ஆண் சர்ப்பமும் நன்மை தீமை அறியதக்க விருட்சமானால் ஏதேனில் இரு நன்மை தீமை அறியதக்க விருட்சம், இரு ஜீவவிருட்சங்களா? அப்படியானால் இது வேதவாக்கியங்களுக்கு மாறான வெளிப்பாடு அல்லவா?

39. அடுத்து, ஆதாம் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று தேவன் கருதி, அவன் விலா எலும்பிலிருந்து ஏவாளை உருவாக்கினாராம். கர்த்தர் எதையும் பூமியில் தனித்தனியாக உருவாக்கவில்லை, ஜோடு ஜோடாகவே (அதாவது ஆண் மற்றும் பெண் ஜோடாக) உருவாக்கினார். ஆக ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாள் ஒரு ஜோடாக: ஆண் மற்றும் பெண் சர்ப்பங்கள் மற்றொரு ஜோடாக இருந்தார்கள் என்கிறார். இந்த நான்கு பேரும் நிர்வாணிகளாக இருந்தும் வெட்கப்படாதவர்களாய் இருந்தார்கள். இந்த நான்கு பேரையும் கர்த்தர் ஏதேன் தோட்டத்தை பண் படுத்த வைத்தார் என்கிறார்.

40. ஆனால் வேதமானது தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார் என்றே கூறுகிறது. ஆதி. 2:15. நான்கு பேர்களை அழைத்துக் கொண்டு வந்து அதாவது ஆதாம் மற்றும் ஏவாள்: மேலும் ஆண், பெண் சர்ப்பங்களை அழைத்துக் கொண்டு வந்தார் என கூறவில்லை. மேலும் ஆதாமை ஏதேன் தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டுவரும்பொழுது ஸ்திரீ (ஏவாள்) உருவாக்கப்படவில்லை. மேலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் குறித்து ஒருமைப்பாட்டிலே கூறுகிறது. நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் ஒன்று என்றே கூறும்பொழுது இவர் ஆண் சர்ப்பம் மற்றும் பெண் சர்ப்பம் எனக் கூறி இருவர் எனக் கூறுவது முற்றிலும் முரண்பாடானது. ஆக இவர் தொடக்கமே முரண்பாடுகளை கொண்டது. ஏனென்றால் இவரே ஒரு முரண்பாட்டின் விதை தானே. பாருங்கள் எந்த ஒரு வெளிப்பாடும் தேவனுடைய வார்த்தையோடு ஒன்றைக் கூட்டவும், குறைக்கவும் கூடாது. தேவனுடைய வார்த்தையை விட்டு வெளியே எந்த வெளிப்பாடும் கிடையாது. எந்த ஒரு வெளிப்பாடும் தேவனுடைய வார்த்தையோடு இசைந்து செல்லவேண்டும்.

41. இப்பொழுது இந்த தன்னைத் தானே ஏழாம் தூதன் என்று அழைக்கிறவர் கூறுகிறதாவது: ஏதேன் தோட்டத்தில் காணப்பட்ட நான்கு பேரும் அதைப் பண்படுத்தும் பணிக்கு சென்றனர். இதில் அவர்கள் ஜோடு மாறி செல்கின்றனர். எப்படி? ஆதாமும் அந்த பெண் சர்ப்பமும் ஜோடாக ஒரு இடத்தில் பணிபுரிகின்றனராம். அடுத்து ஆண் சர்ப்பமும், ஏவாளும் ஒரு ஜோடாக மற்றொரு இடத்தில் அதாவது சுமார் ஒரு மைல் தூரம் உள்ள இடத்தில் பணி புரிகின்றனராம். பாருங்கள், பிசாசின் கற்பனை எந்த அளவிற்கு செல்லுகிறது என்று! ஆதாம் ஏவாள் ஒரு ஜோடாக மற்றும் அந்த ஆண் மற்றும் பெண் சர்ப்பம் ஒரு ஜோடாக இருக்கும்பொழுது அவர்கள் ஏன் ஜோடு மாற்றி பணிக்கு சென்றனர் என்ற விளக்கம் கொடுக்கப்படவில்லை. இது சாகுல் ஹமீதின் ஒரு கட்டுக்கதையே. இவர் பெயர் சாகுல் ஹமீதாகவே இருக்கட்டும், ஜோசுவா சுமாலியேலாக இருக்கவேண்டாம். ஜோசுவா பெயருக்கு களங்கம் விளைவிக்க வேண்டாம்.

42. இந்நிலையில் கர்த்தர் சாத்தானை ஏதேனுக்குள் அனுமதித்தாராம். சாத்தான், ஆண் மற்றும் பெண் சர்ப்பத்துக்குள் மரண ஆத்துமாவை ஊதினானாம். அது ஆண் சர்ப்பத்துக்குள் மாம்ச இச்சையை உண்டாக்கினதாம். சர்ப்பத்தின் நிர்வாணத்தை ஏவாள் பார்த்தாளாம். அவளிடத்தில் கண்களின், மாம்சத்தின் இச்சைகள் உண்டானதாம். ஆண்சர்ப்பம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு ஏவாளோடு சயனித்தானாம்.

43. ஆண் சர்ப்பத்தால் கர்ப்பந்தரிக்கப்பட்ட ஏவாள், ஆதாமிடத்தில் வந்தாளாம். அங்கு பெண் சர்ப்பம் ஆதாமுடன் சயனிக்க கடுமையாக போராடிக்கொண்டிருந்ததாம். இதைப்பார்த்த ஏவாள், ஆதாமை அந்த பெண் சர்ப்பத்துடன் சயனிக்க வகை செய்து கொடுத்தாளாம். ஏவாள் சொல்கேட்டு, அவளுக்கு கீழ்படிந்து ஆதாம் பெண் சர்ப்பத்துடன் சயனித்தானாம். இதைத்தான் ஆதி. 3:6 ல் ஏவாள் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். அதாவது ஆண் சர்ப்பம் ஏவாளோடும், பெண் சர்ப்பம் ஆதாமோடும் சயனித்தார்கள். ஆக ஜீவ விருட்சமாகிய ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சமாகிய ஒரே மரத்தின் கனியை பறித்து புசித்து தங்கள் ஆத்துமாவில் மரணத்தை தரித்து ஆதி. 3:7 ன் படி நிர்வாணிகளானார்கள் என்பதாகும். இதுதான் சாகுல் ஹமீதின் பேய்தனத்துக்கடுத்த பேய் கதை.

44. நாம் இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள வெளிப்பாட்டிலிருந்து அறிவது என்ன? அந்தக் காட்டு ஜீவன் ஏவாளை வஞ்சித்தது. அவள் அவனுக்கு செவிகொடுத்தாள். ஏவாளுக்கு அது புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதுமாயிருந்தது. ஆதலால் ஏவாள் அந்தக் காட்டு ஜீவனோடு சயனித்தாள். தன் அனுபவத்தை தன் புருஷனோடும் பகிர்ந்து கொண்டு, பின் ஏவாள் ஆதாமுடனும் மாம்ச இச்சையினால் சயனித்தாள் என்பதாகும். ஆண் காட்டு ஜீவன் மற்றும் ஏவாள் இணைப்பில் காயீன் பிறந்தான். பொல்லாங்கனால் இவன் உண்டானவன். இந்த ஏழாம் தூதன் ஆதாம் மற்றும் பெண் காட்டு ஜீவன் இணைப்பில் யார் பிறந்தது என்பது குறித்து ஒன்றும் கூறவில்லை. அவர் எதுவும் கூறவும்முடியாது.

45. இச்செயல் ஆதாமுக்கு தவறு எனத் தெரியும். தன் மனைவியாகிய ஏவாள் ஏற்கனவே அந்த தவறுக்குள் ஆகி விட்டாள். அவள் நிமித்தமாக அவனும் அவளுடைய தவறுக்குள்ளானான். ஏனென்றால் அவள் அவன் சரீரத்தில் ஒரு பாகமாக இருந்தாள். ஆதாம் தன் மனைவிக்காக தன்னை ஒப்புகொடுத்தான். ஆதாம் கிறிஸ்துவுக்கு முன் அடையாளம். (Jesus is second Adam.) கிறிஸ்துவும் தம்முடைய மணவாட்டிக்காகத் தம்மை தாமே கல்வாரியில் ஒப்புக்கொடுத்தார். அவளுடைய பாவங்களை கல்வாரியில் சுமந்தார். பாவம் அறியாத அவர் அவளுக்காக பாவமானார். அதே போன்று பாவம் அறியாத ஆதாம் தன் மனைவிக்காக பாவமானான். ஆதாம் பாவம் அறியாதவன். ஆதலால் அவன் பிறனுடைய மனைவியுடன் சயனித்திருக்கவும் முடியாது. மற்றொரு ஆணோடு ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டிருக்கவும் முடியாது.

46. இப்பொழுது ஆதாம் தேவனுடைய குமாரனாக இருப்பதால், கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக இருப்பதால் பிறனுடைய மனைவியோடு (ஆண் சர்ப்பத்தின் மனைவியாகிய பெண் சர்ப்பத்தோடு) சயனிக்க முடியுமா? ஒரு காலும் முடியாதே! ஆதாம் தேவகுமாரன். தேவனிடத்திலிருந்து நேரிடையாக வந்தவன். பிறனுடைய மனைவியோடு சயனிக்க முடியுமானால், தேவனுடைய ஆவியினால் மறுபிறப்பு அடைந்த மனுஷன், மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டவர்கள் பிறனுடைய மனைவியுடன் சயனிக்க முடியுமல்லவா? இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா? பட்டாபிராம் பாஸ்டரும், சாகுல் ஹமீதும் மட்டுமே இதை ஏற்றுக்கொள்வார்கள்.

47. அடுத்து யோசேப்புக்கும், போத்திபார் மனைவிக்கும் இடையில் நடந்த காரியத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். யோசேப்பு இயேசுவுக்கு முன் அடையாளமானவன். பாருங்கள், அவன் என்ன கூறுகிறான். **நான் இத்தனை பெரிய பொல்லாப்புக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்கிறான்.** சோதனைக்கு உட்படாமல் அதை மேற்கொண்டான். தியானியுங்கள் ஆதி.39 அதி. இதுதான் தேவனுடைய பிள்ளைகளுடைய குணாதிசயம்

48. யாக்கோபு, ராகேல் மாம்சஇச்சையினால் உண்டானவன், பிறந்தவன் யோசேப்பு. மாம்ச இச்சையினால் பிறந்த யோசேப்பு இயேசுவுக்கு முன் அடையாளமானவன். (Joseph, perfect type of Christ) மாம்ச இச்சையினால் பிறந்தவன், இயேசுவுக்கு முன் அடையாளமாக இருந்தவன் நான் இத்தனை பெரிய பொல்லாப்புக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யலாகாது என்கிறான். மாம்ச இச்சையினால் பிறந்த யோசேப்பின் காரியமே இப்படியிருக்க, தேவனால் உண்டான, தேவனிடமிருந்து நேரிடையாக வந்த ஆதாமின் காரியம் எவ்வளவு மேன்மையானதாக இருக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். அப்படியானால் ஆதாம் மற்றொரு ஆணுடன் ஆண்புணர்ச்சி, ஓரினச்சேர்க்கையில் ஈடுபடத்தான் முடியுமா அல்லது மாற்றான் மனைவியுடன் சயனிக்கத்தான் முடியுமா? முடியாது ஐயா! ஒருக்காலும் முடியாது! பட்டாபிராம் மிலிட்டரி காமாண்டரும் பிசாசானவனுடைய சாயலான இந்த சாகுல் ஹமீதும் செய்ய முடியும். ஏனென்றால் இவர்கள் பிசாசானவர்கள். இவர்கள் கூறும் காரியத்தை பிசாசானவனால் தான் செய்ய முடியும். தேவனுடைய குமாரன், தேவனிடமிருந்து நேரிடையாக வந்தவன் செய்யமுடியாது.

49. முடிவாக பட்டாபிராம் பாஸ்டர், மற்றும் தன்னைத்தானே ஏழாம் தூதன் என பறைசாற்றும் சாகுல் ஹமீது ஜோசுவா கமாலியேல் இருவரும் பிசாசின் கருவிகள் தான். இவர்கள் உபதேசம் தேவனுடைய வார்த்தையோடும், இக்காலத்துக்குரிய செய்தியோடும், பொருந்துவதாக இல்லை. இந்த இரண்டு பேரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். இந்த இரண்டு பேரையும் புறம்பே தள்ளுங்கள் இவர்கள் வெளிப்பாடு உங்கள் விசுவாசத்தை சீர்குலைக்கும். ஆதலால் இவர்கள் வாசனையே உங்களுக்கு வேண்டாம். துர்சிந்தனை, லௌகீக, பேய்த்தனத்துக்கடுத்த ஞானம் கொண்ட இவர்களை கண்டாலே விலகி ஓடுங்கள், உங்கள் ஜீவனை காத்துக்கொள்ளுங்கள்.

## பாஸ்டர் தங்கமணி சபை உடைந்து சூனியம் ஆகி வருகிறது

50. பல்லாவரம், பாஸ்டர் தங்கமணி சபை குறித்து உங்களுக்கு ஏற்கனவே அடிக்கடி எழுதிவந்துள்ளேன். எனக்கு மிக நெருக்கமான ஒரு குடும்பம் அவருடைய சபையில் அங்கமாக இருந்து வந்தார்கள். அவருடைய சபையில் அடிக்கடி உபதேசங்கள் மாறி மாறி வருவது குறித்து அவர்களை பல முறைகள் கடிந்து வந்து கொண்டே இருந்தேன். நேற்று திருமண அடையாளமாக, சின்னங்கள் எதுவும் அணியகூடாது என்றார். இன்று நாம் மோதிரம் அணிந்து கொள்ளலாம் மற்றும் தாலி அணியக்கூடாது என்கிறார். நேற்று கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, கர்த்தருடைய வருகை வரவில்லை. நீங்கள் எதை வேண்டுமானாலும் விசுவாசியுங்கள் என்றார். இன்று கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்கிறார். இப்படியாக இவரது உபதேசம் நாளுக்கு நாள் வித்தியாசப்பட்டுக்கொண்டே செல்லும். நிலையான உபதேசம் எதுவும் கிடையாது. ஒரு நாள் தன்னுடைய ஊழிய அழைப்பை உறுதி செய்ய, தன்னை பாஸ்டராக நியமிக்க பாஸ்டர் P.M.A. சாமியிடம் ஓடினார். இப்படியாக இவரது நடபடிகள் ஒன்றும் தேவனுடைய வார்த்தையின்படி இல்லாததால் இவர் தேவனால் ஏற்படுத்தப்பட்ட பாத்திரம் அல்ல என ஆணித்தரமாக கூறி தேவனுடைய சபையை எச்சரித்து வந்தேன்.

51. இதனால் என் மீது வெறுப்புக் கொண்ட இவர் எனக்கு நெருக்கமான குடும்பத்தினரிடம் காலேப் யோசுவா உங்கள் வீட்டுக்கு வருவதை உடனே நிறுத்துங்கள், நிறுத்துங்கள் என பலமுறை கூறிப் பார்த்தார். அவர்கள் அசையவில்லை. பிரசங்கபீடத்தில் இருந்து காரசாரமான அறிக்கை வெளியிட்டார். அதற்கும் அவர் அசையவில்லை. காலேப் யோசுவாவை ஒருவர் பல்லாவரத்தில் தங்கள் இல்லத்தில் ஏற்றுக்கொண்டால் அவர்கள் வேசியாகத்தான் இருக்கவேண்டும் எனக் கடுமையான விமர்சனம் செய்து அறிக்கை வெளியிட்டார். அதற்கும் அந்த குடும்பம் அசைவு கொடுக்கவில்லை. என்னோடு ஐக்கியத்தில் உறுதியாக நின்றார்கள்.

52. இந்நிலையில் அந்த குடும்பத்தின் சகோதரிக்கு சின்குன்குனியா காய்ச்சல். அந்த சகோதரி ஒருவாரம் சபை செல்லவில்லை. மறுவாரம் சென்றபோது பாஸ்டர் அவர்களிடம் கடந்த வாரம் சகோதரி சபைக்கு வராததன் காரணம் கேட்க அவர்கள் சிரித்துக்கொண்டே சின்குன்குனியா காய்ச்சல் ஆதலால் வரவில்லை எனக் கூறியிருக்கிறார்கள். மறு வாரம் பிரசங்கபீடத்திலிருந்து பெண்கள் சிரித்துக் கொண்டு பதில் கூற கூடாது எனக் கண்டனம் பண்ணி மீண்டும் அந்த விவகாரத்தைக் குறித்து **பொம்பள சிரிச்சா போச்சு, புகையிலை விரிச்சா போச்சு** என்று கீழ்த்தரமாக, கொச்சையாக, உலகப்பிரகாரமாக விமர்சனம் செய்திருக்கிறார். அவர்கள் ஒரு பயபக்தியுள்ள குடும்பமாக இருந்ததால் ஒரு குடும்ப பெண்ணை இழிவாக விமர்சிக்கும் வார்த்தையை பிரசங்கபீடத்திலிருந்து கேட்டு விட்டு அமைதலாக வெளியே வந்து விட்டார்கள். அவர்கள் அந்த நேரத்தில் சபையில் பிரச்சனை எதுவும் உருவாக்கவில்லை. அதுவே அவர்கள் எப்படிப்பட்ட கனிகளை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியது.

53. மறுவாரம் அந்த குடும்பத்தின் தலைவர், அவர் அந்த சபையின் மூப்பர், தன் குடும்பம் அடுத்த வாரம் முதல் சபைக்கு வராது, வேறு சபைக்கு செல்லுகிறோம், இந்த சபையில் ஒருமனப்பாடு இல்லை எனக் கூறி வந்துவிட்டார்கள். அவர்கள் மறுவாரம் முதல் சபைக்கு செல்லவில்லை. மிகவும் தொலைவில் உள்ள பெரவலூர் சபைக்கு சென்று வருகிறார்கள். அங்கும் காலேப் யோசுவாவுக்கும் எங்களுக்கும் ஐக்கியம் உண்டு, அதில் உங்களுக்கு ஆட்சேபனை உண்டா இல்லையா என்று கேட்டு, ஆட்சேபனை இல்லை என்ற பின்தான் சபை சென்றுள்ளார்கள். தங்கமணி பாஸ்டர் தற்போது தனது குடும்பத்தினரில் சிலரை வைத்துக்கொண்டு ஆட்டுக்கல்லில் மாவு அரைத்து வருகிறார். அந்த சிலர் மாவை தள்ளிவருகிறார்கள். சீக்கிரமாக பல்லாவரம் பகுதியில் இழுத்து மூடவேண்டிய சபைகளில் இதுவும் ஒன்று.

54. எனக்கு இங்கு ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. நான் பாஸ்டர் அரவிந்கோஸ் உடன் ஐக்கியமாக இருந்த காலம். அங்கே முக்கிய பிரமுகர் எப்போதும் சபைக்கு காலதாமதமாகவே வருவார். நான் என் பிரசங்க வேளையில் பொதுவாக காலதாமதமாக வருபவர்களை கண்டிப்பது உண்டு. அன்று நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். வழக்கமாக காலதாமதமாக வருகிறவர் பிரசங்கவேளையில் தான் வந்தார். சபை கூடுதலுக்கு தாமதமாக

வருகிறவர்களை அன்றும் கண்டித்தேன். உடனே அந்த சகோதரன் நீங்கள் என்னை தான் மனதில் வைத்து கண்டித்து வருகிறீர்கள் என்று பிரசங்கவேளையில் எழுந்து நின்று பிரசங்கத்தை தடை செய்தார். சபையில் எனக்கு ஆதரவாக அனைத்து விசுவாசிகளும் பேசினார்கள். அவர் ஒரு ஊழியக்காரன். தவறுகளை கண்டிக்கத்தான் செய்வார். இதில் ஊழியக்காரன் மீது தவறு எதுவும் இல்லை. மேலும் இந்தப்பிரச்சனையை நீங்கள் சபை முடிந்தவுடன் கொண்டு வந்திருக்கலாம். பிரசங்கவேளையில் இடையூறு செய்து, சபையை குழப்பத்துக்குள் கொண்டு வரக்கூடாது என அவரையே அனைவரும் கண்டித்தனர். ஆதலால் அவர் உடனே சபையை விட்டு வெளியேறிவிட்டார். அவருடன் அவரது குடும்பத்தினர் சிலரும் வெளியேறிவிட்டனர்.

55. நான் மற்றும் சபை அந்த ஆத்துமாவை இழந்து போக விரும்பவில்லை. சபை கூடுதல் முடிந்தவுடன் பாஸ்டரிடம் அந்த சகோதரனுடன் தொலைபேசியில் பேசும்படி கூறினேன். பின் நானும் பாஸ்டரும் அந்த சகோதரன் வீட்டிற்கு புறப்பட்டு சென்றோம். அங்கு அவர் தன் தவறை உணர்ந்தார். சமரசம் ஆனார். அதன்பின் சபைக்கு வர ஆரம்பித்தார். ஆனால் பாஸ்டர் என்னை வெளியே தள்ளினார். என் போதனைகளை கேட்டு பல பெண்கள் தங்கள் கழுத்தில் தாலி அணிய ஆரம்பித்தனர். இதனால் என்னை வெளியே தள்ள நினைத்தவருக்கு ஒரு சரியான வேளை கிடைத்தது. அதை பயன்படுத்திக் கொண்டார்.

56. நான் இந்த சம்பவத்தை ஏன் எழுதுகிறேன் என்றால் ஒரு ஊழியக்காரன் எந்த ஒரு ஆத்துமாவும் இழந்து போவதை தாங்கிக் கொள்ள முடியாது. ஒரு ஆத்துமா தவறான வழியில் சென்றால் கூட அதை அணைத்துக் கொண்டு அதற்கு புத்திமதிகள் சொல்லி அதை திருத்தி மந்தைக்கு கூட்டி வர வேண்டும். ஆனால் யாரைப்பற்றியும் கவலைப்படாத பாஸ்டர் தங்கமணி போகிறவர்கள் போகட்டும், இருக்கிறவர்கள் இருக்கட்டும் என்று செயல்படுவதால் அவர் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மேய்ப்பன் அல்ல என்றேன். அவர் இதுவரை தன்னுடைய சபையை விட்டு விலகிய அந்த குடும்பத்தை சந்தித்து அவர்களை திரும்பவும் மந்தைக்கு அழைக்கவும் இல்லை. ஆதலால் தான் இவரது சபையில் நாளுக்கு நாள் பிளவுகள் ஏற்பட்டுக் கொண்டே போகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு கூட இவரது சபையில் இருந்து பலர் பிரிந்து சென்றதால் இன்று பம்மல், பொழிச்சலூர் பகுதிகளில் நான்கு ஐந்து சபைகள் மேலும் உருவாகிவிட்டன. இப்படிப்பட்ட பாஸ்டர்களால் பல்லாவரம் பகுதிகளில் கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றது. அன்பு தணிந்து கொண்டே போகிறது. வேத வாக்கியம் நிறைவேறுகிறது.

57. பாஸ்டர் தங்கமணி சபையில் நான் அறிந்த மற்றொரு காரியம் என்னவென்றால் சபை கூடுதலுக்கு வந்து செல்வதே சொற்ப எண்ணிக்கைக்குரியவர்கள். இதில் பாஸ்டர் மனைவியாகிய சகோதரி சபைக்கு வரும் சில பெண்களிடம் பல ஆண்டுகளாக பேசுவதே கிடையாது. ஆனால் அவர்கள் கர்த்தருடைய இராபோஜனபந்தியில் தவறாது கலந்து கொள்வார்கள். ஒருவர் கால்களை ஒருவர் கழுவுகிறார்கள். காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடக்கும் பேர் உபவாச கூட்டத்தில் கலந்து கொள்ளுகிறார்கள். பெயரளவுக்கு வெள்ளி உபவாசம் எனக் கூறிக்கொண்டு, அவர்கள் உபவாசிக்கும் நாளிலே அவர்கள் இச்சைகளின்படி நடந்து, தங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய் செய்கிறார்கள். (ஏசா. 58:3) அப்படியானால் அந்த உபவாசத்தின் பலன் என்ன? பாஸ்டருக்கு பிரதி வெள்ளி பொழுது போக்குக்கு அப்படி ஒரு புரோக்கிராம் வைத்துள்ளார்கள், அவ்வளவுதான். இப்படியாக இவர்கள் காரியங்கள் அனைத்தும் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாகவே இருக்கிறது.

58. இக்காலத்துக்குரிய செய்தி இது குறித்து என்ன கூறுகிறது என்பதை கவனியுங்கள். நாங்கள் ஏன் இராபோஜனம் எடுக்கிறோம் என்றும், ஏன் கால்கள் கழுவுதலை கடைப்பிடிக்கிறோம் என்றும், அங்கத்தினர்கள் பாவத்தில் இருப்பதாக அறிந்திருந்தால் அதில் பங்கெடுக்க நாங்கள் ஏன் அனுமதிப்பதில்லை என்றும் உங்களிடத்தில் கூறப்போகிறோம். ஆகையால் தான் கடந்த இரண்டு மூன்று வாரங்களாக சண்டை சச்சரவு காணப்படும் அங்கத்தினர்களிடையே ஒரு அங்கத்தினரிலிருந்து மற்றொரு அங்கத்தினரிடம் நான் சென்று வருகிறேன். நீங்கள் பீடத்தினண்டையில் தேவனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட கோப்பையில் பங்கெடுத்து விட்டு ஒருவர் மற்றொருவரிடம் பேசாமலிருப்பதும், தெருவில் செல்லும்போது மற்றவரைக் கண்டால் தலையை திருப்பிக் கொண்டு போவதும் உங்களுக்கு வெட்கமாக இல்லையா?.......... அந்தவிதமான ஆவி உங்களில் இருக்கும் வரைக்கும் நீங்கள் தேவனுடன் சரியாக இல்லை. **(நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல**, பத்தி.195, நாள் 27.09.1958**)** தங்கமணி பாஸ்டர் என்றைக்காவது தன் மனைவியாகிய சகோதரியிடம் நீ இன்னென்ன சகோதரியிடம் ஏன் பேசுவதில்லை, காரணம் என்ன எனக் கேட்டு, மற்ற சகோதரியிடம் சென்று காரணம் கேட்டு அவர்களுக்குள் சமரசம் செய்து வைத்தாரா? பல ஆண்டுகளாக சபையில் சகோதரிகளுக்குள் ஒருமனம் இல்லையே! மேலும் பாஸ்டர் குடும்பத்தை பற்றி தவறான காரியங்கள் கேள்விப்பட்டு அதை பாஸ்டரிடம் கேட்டால், நீங்கள் என் குடும்பத்தை எதுவும் கேட்கக் கூடாது. நான் கர்த்தருக்கு கணக்கு கொடுப்பேன் என்று ஆணவமாக பேசி சபையில் ஒருமனப்பாட்டை சீர்குலைத்து வந்தாரே. இவர் விசுவாசி குடும்பங்களை காரணமில்லாமல் கடிந்து கொண்டு, அதே நேரத்தில் தன் குடும்பத்தில் இருக்கும் குறைபாடுகளை யாராவது சுட்டிக் காட்டினால், நான் பாஸ்டர் நீங்கள் என்னை எதுவும் கேள்விகள் கேட்கக்கூடாது என்கிறாரே. இது என்ன? இந்த மனுஷன் நிச்சயமாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய ஊழியக்காரன் அல்ல. சபைக்கு முன் முன்மாதிரியே கிடையாது. தன் நடத்தையில் முன்மாதிரி கிடையாது. போதனையில் நாளுக்கு நாள் பச்சோந்தி வேஷம். தான் ஊழியக்காரன் உயர்ந்தவன், நீங்கள் விசுவாசிகள் யாரும் என்னை தட்டிக்கேட்க கூடாது என்ற மேட்டிமையான எண்ணம். இப்படிப்பட்ட மேட்டிமையான சிந்தனையோடு பாஸ்டர் இருக்கும்போது இவர் சபைக்கு யார்தான் செல்லுவார்கள்? இன்று இவரது உறவினர் சிலரை வைத்து மாரடித்துக் கொண்டிருக்கிறார். எதற்காக? சபை சொத்துக்காக. அதை அபகரிக்கவே. ஆனால் இதற்கும் போட்டிக்கு ஒரு குரூப் உள்ளே இருக்கிறது. அவர்கள் என்றைக்கு நம்ம கைக்கு சபையானது வராது என ஆவலாய் காத்திருக்கிறார்கள்.

59. எனக்கு மிகவும் நெருக்கமான குடும்பம் பாஸ்டர் தங்கமணி சபையிலிருந்து பிரிந்து வந்ததற்கு காலேப் யோசுவா தான் காரணம் என்ற புரளிக்கு செவிகொடுக்காதீர்கள். நான் தான் காரணம் என பல்லாவரத்தில் உள்ள போலி பாஸ்டர்கள் பலரில் சிலர் என்னை தாறுமாறாக கண்டனம் பண்ணி கடிந்து விமர்சித்து வருகின்றனர். இந்த செயல் பிசாசினுடையதே. 25.12.06 அன்று ஒரு சகோதரர் என்னை என் இல்லத்தில் சந்தித்தார். அவரிடம் பாஸ்டர் தங்கமணி தன் சபையிலிருந்து பிரிந்து சென்ற குடும்பத்திற்கு காலேப் யோசுவா தான் பாஸ்டர் நான் அல்ல. ஆதலால் என்னை விட்டு பிரிந்து சென்றுவிட்டார்கள் எனக் கூறி என்னை தாறுமாறாக விமர்சனம் செய்திருக்கிறார். நான் அந்த குடும்பத்தை மாதம் ஒன்று அல்லது இருமுறை சந்திக்கிறேன். சில மணி நேரங்கள் ஆவிக்குரிய காரியங்களை நாங்கள் ஒன்றாக அமர்ந்திருந்து பகிர்ந்து கொள்ளுகிறோம். அவ்வளவுதான். மற்றபடி அவர்களுடைய காரியங்களில் நான் எதுவும் தலையிடுவதில்லை. அவர்கள் தங்கள் சுயாதீனத்தின்படி செயல்படுகிறார்கள். சில

காரியங்களில் எனது ஆலோசனைகளைக் கூறுவேன். அதை ஏற்றுக்கொள்வது, கொள்ளாதது அவர்கள் சுயாதீனத்துக்கு விட்டுவிடுவேன். எனக்கும் அவர்கள் அந்த சபையை விட்டு வெளியே வந்ததற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அதற்கு காரணம் பொம்பள சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு என்று ஒரு குடும்ப பெண்ணை குறித்து கொச்சையாக, கீழ்த்தரமாக பிரசங்கபீடத்திலிருந்து விமர்சித்ததே காரணம். இதிலிருந்து இந்த பாஸ்டர் எந்த அளவுக்கு அடிமட்டத்து மனுஷன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

60. இப்பொழுது நான் அந்த குடும்பத்தினர் ஒரு சிறிய சாக்கடை அகழியில் இருந்து வெளியே வந்து மீண்டுமாக ஒரு பெரிய சாக்கடை அகழிக்குள் விழுந்து விட்டார்களே என்று தான் விமர்சிக்கிறேன். பாஸ்டர் தங்கமணி சபைக்கும் பெரவலூர் சபைக்கும் எந்த விதமான வித்யாசமும் இல்லை. இரண்டிலுமே தேவனுடைய வார்த்தைக்கு இடமில்லை. ஒரு அகழியில் இருந்து வெளியே வந்தவர்கள் கொஞ்சகாலம் கர்த்தருடைய சமுகத்தில் அவர் வழிநடத்துதலுக்காக பொறுமையாக காத்திருந்திருக்கலாம். ஆனால் அதற்குள் மற்றொன்றுக்குள் விழுந்து விட்டார்கள். கர்த்தர் தான் மீண்டும் அவர்களை வெளியே கொண்டு வர வேண்டும்.

61. இங்கு இக்காலத்துக்குரிய செய்தியில் இருந்து ஒரு எடுத்துக்காட்டு கொடுக்க விரும்புகிறேன். அதாவது அதிகமான ஜனங்கள் இந்த சபைக்கு வருகிறது போதுமானதா இல்லையா? இது பெரிதான சபை இல்லையா? இல்லை, ஐயா! அது அல்ல. அங்கே வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையும் அந்த சபையானது பிரசங்கிக்கவில்லையென்றால் அதன் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆமென் என்று கூறினாலும், ஒவ்வொரு அடையாளத்தையும், ஒவ்வொரு அற்புதத்தையும் விசுவாசித்தாலும், அவர்கள் மத்தியில் கிரியை செய்கிறதைக் கண்டாலும், எவ்வளவு பெரிதாய் இருந்தாலும், எவ்வளவு சிறந்ததாய் இருந்தாலும், கவலைப்படாமல் **நான் அதினின்று விலகி போய்விடுவேன்.** புரிகின்றதா? **(தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையே உள்ள போராட்டம்** பத்தி 235, நாள் 31.05.1962)

62. ஆம் பிரியமானவர்களே! இன்றைக்கு ஜனங்கள் பெரிய கட்டிடத்தை, பெரிய கூட்டத்தை, அதிகமான கவர்ச்சியைத்தான் பார்க்கிறார்கள். அங்கு சபையில் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுகிறதா என்று பார்ப்பது இல்லை. நாம் சார்ந்திருக்கும் சபை தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் போதித்து அதன்படி தன்னை காத்துக் கொள்ள வேண்டும். அது தான் முக்கியம். அதை விட்டு விட்டு அந்த சபை பார்க்க தோரணையாக இருக்கிறது. பாடல்கள் நன்கு பாடுகிறார்கள். பிரசங்கம் நன்கு கவர்ச்சியாக இருக்கிறது. மற்ற சபைகளுக்கு இது பரவாயில்லை என்று கூறி அதன் மீது நாட்டம்கொண்டு நாம் செல்லுவோமாகில் நிச்சயமாக வஞ்சிக்கப்படுவோம். சாத்தான் கவர்ச்சியாக உள்ளான். அது குறித்து தான் சகோ. பிரன்காம் கூறுகிறார். அந்த சபை தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆமென் என்று கூறினாலும், அற்புத அடையாளங்கள் அங்கு நடந்தாலும், அதன் மத்தியில் பலத்த கிரியைகள் நடப்பிக்கப்பட்டாலும் அது தேவனுடைய வார்த்தை ஒவ்வொன்றையும் பிரசங்கிக்காவிட்டால் நான் அதை விட்டு விலகிப்போவேன் என்கிறார். நாமோ அங்கு தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதைக் குறித்து கவலைப்படாமல், இதர காரியங்களைக் குறித்தே கவலைப்படுகிறோம். பெரவலூர் சபையில் தேவனுடைய வார்த்தை முற்றிலுமாக பிரசங்கிக்கப்படுவதில்லை என நூற்றுக்கு நூறு சதவீதம் உறுதியாக என்னால் கூறமுடியும். முதலாவது சகோதரி தன் வேலையை விடவேண்டும். இரண்டாவது பாஸ்டர் ஊர் சுற்றுவதை நிறுத்த வேண்டும். இன்னும் சபையில் மாறுபாடான காரியங்கள் அநேகம் உண்டு. இது குறித்து ஏற்கனவே எழுதியுள்ளேன். இவைகளை பாஸ்டர் நிறுத்துவாரா? ஒருக்காலும் நிறுத்தவேமாட்டார். ஏனென்றால் அது அவருக்கு கௌரவ பிரச்சனையாகிவிடும். அவர் தேவனுடைய மனஷனாயிருப்பாரானால் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுப்பார். அவர்கள் கேட்கும்படி நான் யாரோடே பேசி எச்சரிப்பேன்? அவர்களுடைய செவி விருத்தசேதனமில்லாதது. அவர்கள் கேட்கமாட்டார்கள். கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது. அதின் மேல் அவர்களுக்கு விருப்பமில்லை. எரே.6:10.

**63. கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமானவர்களே! கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறோம் என்று உறுதியாய் கூறிக்கொண்டிருக்கிற இரு வகுப்பினர் நமக்கு உண்டு. அது உண்மை. ஒன்று புத்தியுள்ள கன்னிகை மற்றொன்று புத்தியில்லாத கன்னிகை. அது சரிதானே (மேற்கண்ட செய்தியில் பத்தி 207) இப்பொழுது நீங்கள் புத்தியுள்ள கன்னிகையா? அல்லது புத்தியில்லாத கன்னிகையா என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். இது இந்த 2007 வது ஆண்டில் உங்களது முக்கியமான முடிவாக இருக்கட்டும். அது நீங்கள் கிறிஸ்துவுக்குள் உள்ளேயா அல்லது வெளியேயா என்பதை உறுதிப்படுத்தும்.**

64. உண்மையான மணவாட்டி வார்த்தையினால் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். அவள் இயேசுவின் ஒரு பாகமாக இருந்தால் அவள் கிறிஸ்துவின் வார்த்தையாக இருக்கவேண்டும். (மேற்கண்ட செய்தியில் பத்தி 224) ஆனால் நீயோ நீ சார்ந்திருக்கும் சபையின் ஒரு பாகமாய், உன் பாஸ்டரின் ஒரு பாகமாய் அல்லவா இருக்கிறாய். நீ காட்டும் சபை வைராக்கியம், பாஸ்டர் வைராக்கியம் தேவனுடைய வார்த்தையின் மேல் இல்லையே. அப்படியானால் உன் நிலை அந்தோ பரிதாபம்.

## 2007 ஆம் ஆண்டில் நீங்கள் அறிந்து, ஆக்கப்பூர்வமாக செயல்படுத்த வேண்டிய இன்றியமையாத செயல்பாடுகள்

65. இந்நாட்களில் நீங்கள் சார்ந்திருக்கும் உங்கள் சபையை விட்டு வெளியே வாருங்கள். ஏனென்றால் அவைகள் உங்களை தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் நேராக வழிநடத்துவதில்லை. உங்கள் பாஸ்டர் ஒவ்வொருவரும் தன் தன் சுய மூளையில் இருந்து உதயமாகும் வெளிப்பாடுகளுக்கும், உபதேசங்களுக்கும், பிரமாணங்களுக்கும் உங்களை வழிநடத்தி வருகிறார்கள். ஆதலால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் வந்து சேருங்கள்.

66. உங்கள் பாஸ்டர்களின் ஊழியம் வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. பெரும்பான்மையோர் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறார்கள். அதாவது ஐந்து வகை ஊழியம் ஒரு பக்க தொழிலாக மாறிவிட்டது. பிரதி வாரம் திங்கள் முதல் சனி வரை இன்னார் இந்த அலுவலகத்தில் மேனேஜர், அடுத்தவர் அந்த தொழிற்சாலையில் இன்ஜீனியர், மூன்றாவது நபர் அந்த ஆஸ்பத்திரியில் ஒரு டாக்டர், நான்காவது நபர் இந்த கம்பெனியில் ஒரு விற்பனை அலுவலர். ஞாயிறு மட்டும் ஒரு நாள் காலை முதல் மாலை வரை இவர்கள் பற்பல சபைகளில் பாஸ்டர்கள், மேலும் சுவிசேஷகர்கள் என தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டார்கள். கர்த்தர் தமது

சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய பாஸ்டராக, சுவிசேஷகராக ஏற்படுத்தியிருக்கிறார் என்கிறார்கள். இது எவ்வளவு பெரிய வஞ்சகம் மற்றும் வெட்கக்கேடு? இவர்களை நம்பி ஒரு கூட்ட ஜனங்கள் மோசம்போகிறார்கள். ஏனென்றால் இவர்கள் குருடர்களாக குளிருமின்றி, அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறார்கள். தேவனுடைய மணவாட்டி இவர்களை ஒருக்காலும் தேவனுடைய ஊழியக்காரர்களாக அங்கீகரிக்கமாட்டாள்.

67. நான் அறிய பொழிச்சலூரில் ஒருவர் நேற்றுவரை நான் கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்ட, ஐந்து வகை ஊழியத்தில் ஒருவன் என பறைசாற்றி ஓரிரு சபைகளுக்குச் சென்று பிரசங்கித்து வந்தார். இன்று நான் வயிற்று பிழைப்புக்காக வெளிநாடு செல்லுகிறேன், தமிழ்நாட்டில் கிடைக்கும் வருமானம் எனக்கு போதுமானதாக இல்லை என்று கூறி பறந்து சென்றுவிட்டார். ஏற்கனவே ஒருவர் பறந்து மீண்டும் கீழே இறங்கி விட்டார். நான் பலமுறை இவர்களை குறித்து தேவனுடைய சபையை எச்சரித்து வந்தேன். யாரும் அதை காதில் போட்டுக் கொள்ளவில்லை. அந்த நபர்களும் திருந்தவில்லை. இப்பொழுது பறந்து சென்றவரை சுவிசேஷகர் என அழைத்து உபயோகித்தவர்கள் யார்? அவர்களும் குருடர்களே. வேதவாக்கியங்களின் அடிப்படையில் உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு கணவனும், மனைவியும் சில காலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி ஒருவரைவிட்டு ஒருவர் பிரியக்கூடாது. (1கொரி. 7:5) தன்னை ஐந்து வகை ஊழியத்தில் சுவிசேஷகன் என்று அழைத்துக்கொண்டு பணம் சம்பாதிப்பதற்காக தன் மனைவி மக்களைப் பிரிந்து ஒரு வாழ்க்கை வாழ்பவனானால் அவன் எப்படி சுவிசேஷகனாக இருக்கமுடியும்? இது அவனுக்கும் வெட்கக்கேடு, அவனைச் சார்ந்து இருக்கிறவர்களுக்கும் வெட்கக்கேடு. எனவே இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யும் கள்ளகபடமுள்ள வேலையாட்களை விட்டு வெளியே வாருங்கள்.

68. சிலர் பாஸ்டர் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவரது மனைவி பொது பணிஸ்தலங்களில் வேலை செய்கிறார்கள். இந்தக் குடும்பம் இக்காலத்துக்குரிய செய்தியின் அடிப்படையில் இல்லை. வேதவாக்கியங்களின் அடிப்படையிலும் இல்லை. இரண்டுமே இவர்களை கடிந்து கொள்கிறது. இப்படியிருக்க வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாத ஒரு குடும்பத்தைக் கொண்ட ஒரு நபரை தேவன் தம்முடைய ஐந்து வகை ஊழியங்களில் எடுத்து உபயோகிப்பாரா? நிச்சயமாக ஒருக்காலும் அல்ல. இது குறித்து நான் அதிகமாக உங்களுக்கு எழுதியுள்ளேன். ஆதலால் மனைவியை பணிக்கு அனுப்பி தான் பாஸ்டர் ஊழியத்தில் உள்ள நபர்களோடு ஐக்கியம் வைத்துக் கொள்ளாதீர்கள். இவர்களால் உங்களுக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை.

69. கர்த்தருக்குரிய தசமபாகம் கர்த்தரை முற்றிலுமாக சுதந்தரமாக கொண்டவர்களுக்கு மட்டுமே. இப்பிரபஞ்சத்தில் ஒரு பணி செய்துகொண்டு, சொத்து ஆஸ்திகளை உடையவனாய், இதர வருமானங்கள் உடையவனாய் ஒருவன் கர்த்தருக்குரிய தசமபாகத்தில் பங்கு கொள்ள முடியாது. பங்கு கொள்கிறவன் கள்ள கபடமுள்ள வேலையாள். நீங்கள் தகாத நபர்களுக்கு கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொடுப்பீர்களானால் அதை தேவன் ஒருக்காலும் தம்முடையதாக அங்கீகரிக்கமாட்டார். அவருடைய வார்த்தையின்படி ஒருவன் அவருக்கு கொடுக்கும் தசமபாகத்தையே கர்த்தர் அங்கீகரிப்பார். ஆதலால் உங்கள் தசமபாகம் கர்த்தருக்குரியது. அதை உங்கள் பாஸ்டருக்குரியது என அழைப்பது தவறு. நீங்கள் ஓடும் நதியில் உங்கள் பணத்தை வீசி எறிந்து விட்டு நாங்கள் கர்த்தருக்கு கொடுத்தோம் என்று கூற முடியாது. கர்த்தருக்குரியது வேதவாக்கியங்களின் அடிப்படையில் இருக்கவேண்டும். தங்களுடையது அல்லாததை தங்களுக்காக சேர்த்துக்கொள்ளும் பாஸ்டர்களே உங்களுக்கு ஐயோ!,

70. முழுக்க முழுக்க பிரன்காம், பிரன்காம் எனக் கூறி பிரசங்கம் செய்யும் கள்ளகபடமுள்ள வேலையாட்களைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். அவர்களை விட்டு விலகுங்கள். அவர்கள் சாத்தான் எடுத்து பயன்படுத்தும் பாத்திரங்கள். இவர்கள் வேதவாக்கியம் ஒன்றை வாசித்து பைபிளை ஓரங்கட்டி வைத்துவிட்டு, செய்திபுத்தகங்களை கரங்களில் ஏந்திக்கொண்டு முழுக்க முழுக்க அதையே வாசித்து பிரசங்கம் செய்கிறார்கள். இவர்கள் தேவ ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்கள் அல்ல. செய்திபுத்தகங்களைப் படித்து அதிலிருந்து கிடைக்கும் அறிவுகளை கொண்டு பிரசங்கம் செய்கிறார்கள். கையில் தன் பாடப்புத்தகம் அல்லாது ஒருவர் எழுதி வெளியிட்ட நோட்ஸ்களை கையில் வைத்துக்கொண்டு பாடம் சொல்லி கொடுக்கும் ஆசிரியர் எப்படி ஒரு பூரணமான ஆசிரியர் இல்லையோ அவ்விதமாகவே இந்த ஊழியரும் ஒரு பூரணமான தேவமனுஷன் அல்ல. பூரணமான ஒரு ஆசிரியன் தன் கரங்களில் பாடப்புத்தகத்தை வைத்துக்கொண்டே தன்னுடைய வகுப்பை நடத்துவான். அவ்வாறே ஊழியக்காரர்களின் கரங்களில் பைபிள் தான் இருக்கவேண்டும்.

71. வேதஉபதேசத்துக்கு மாறான ஜீவியம் செய்துவரும், ஒன்றை போதித்து அதற்கு மாறாக ஜீவியம் செய்து வரும் கள்ளகபடமுள்ள வேலையாட்களை நம்பியும் மோசம்போகாதிருங்கள். இவர்களையும் விட்டு விலகுங்கள். நகை அணியக்கூடாது என்பது உபதேசம். ஆனால் திருமணத்தில் தங்கள் குமாரத்திகளை நகைகளால் அலங்கரித்து அழகு பார்ப்பவர்கள் கள்ள கபடமுள்ள வேலையாட்கள். அவிசுவாசிகளுடன் திருமணத்தில் பிணையக் கூடாது என்பது உபதேசம். ஆனால் தன் மகன் மற்றும் மகளுக்கு ஸ்தாபன சபைகளில் பெண்/மணமகன் தேர்ந்தெடுப்பவர்கள் மாய்மாலக்காரர்கள். இவர்கள் எல்லாம் மாய்மாலம் செய்யும் ஊழியர்கள். கள்ளகபடமுள்ள வேலையாட்கள். இவர்களை எல்லாம் எப்படி தேவனுடைய சரீரமாகிய சபையை பக்திவிருத்தியடையச் செய்யமுடியும்? இவர்களையும் விட்டு விலகுங்கள். காலம் தாமதம் வேண்டாம்.

72. தன்னுடைய மந்தையை மேய்க்காது, பிறனுடைய மந்தையை மேய்க்க ஊர் ஊராக சுற்றும் உங்கள் பாஸ்டர்களை குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் தங்கள் பெயருக்கும், புகழுக்கும் பல இடங்களில் அறிமுகமாகிறதற்கும் ஊர் ஊராக சுற்றுகிறார்கள். இவர்கள் ஊர் ஊராக சுற்றுவதினால் அவர்களுடைய மந்தைக்கு எந்தவிதமான பிரயோஜனம் இல்லை. மாறாக அது அவருக்கு பொருளாதார வசதியை பெருக்கிக்கொள்ள உதவுகிறது. தன் குடும்ப காரியத்தை விட்டு பிறர் வீட்டு குடும்ப காரியத்தில் தலையிடும் எந்த ஒரு புருஷனும் தன் குடும்பத்தை சரியாக பராமரிக்க முடியாது. ஒரு மந்தையின் மேய்ப்பன் தன் மந்தையை விட்டு வேறு எங்கும் செல்லக் கூடாது. அவன் தன் மந்தையின் மேலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். சுவிசேஷஊழியம் என ஊர் சுற்றக் கூடாது. சுவிசேஷ ஊழியம் இவரது பணி அல்ல. சுவிசேஷ ஊழியத்திற்கு ஆட்கள் இல்லையே என்று எண்ணி தான் அந்த பணியை செய்ய முற்படக் கூடாது. ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்பட்ட கதைதான் அந்த ஊழியம். இவர் தன் ஊழியத்தை செய்யட்டும். சுவிசேஷ ஊழியத்தை கர்த்தர் பார்த்துக் கொள்வார். ஐந்து

வகை ஊழியத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பணிகளை செய்கிறவர்களாகவே இருக்கவேண்டும். ஒன்றை மற்றொன்றுடன் இணைக்க கூடாது. ஆனால் உங்கள் பாஸ்டர்களோ, தங்கள் மனம்போன போக்கிலே மாறுபாடாய் நடந்து வருகிறார்கள். தட்டிக்கேட்பார் இல்லை. விசுவாசிகளும் பேர்கிறிஸ்தவர்களாகவே இருக்கிறார்கள். ஆவிக்குரியவர்களை காண்பது அரிதாக இருக்கிறது.

73. ஒரு பாஸ்டர் தன் குடும்பத்தை சரிவர நடத்தவில்லையென்றால், அவரது குடும்பம் சாட்சியாக இல்லாத பட்சத்தில் அவர் தேவனுடைய சபையை எப்படி விசாரிக்க முடியும்? அதை எப்படி சத்தியத்திற்குள் வழிநடத்தமுடியும்? அவிசுவாசியோடு திருமணத்தில் சம்பந்தங்கொள்ளும் ஒரு பாஸ்டரை, தன் மனைவியை வேலைக்கு அனுப்பும் பாஸ்டரை நீங்கள் எப்படி நம்பமுடியும்? முடியாதே!

74. பொன்னேரி பாஸ்டர் தன் மகனுக்கு பெந்தெகொஸ்தே ஸ்தாபன சபையிலிருந்து பெண் கெண்டார். அன்று ஸ்தாபனத்தில் தேவன் இல்லை எனக் கூறியவர் இவர். இன்று மகன் திருமணத்திற்காக தேவன் ஸ்தாபன சபையில் இறங்கி விட்டார், அல்லேலூயா! ஸ்தோத்திரம்!! என்கிறார். ஊருக்குத்தான் உபதேசம். இவருடைய கனிகள் இவர் யார் என்று சாட்சி கொடுக்கின்றன. இவர் ஒரு கள்ள கபடமுள்ள வேலையாள் என்பதை இன்னும் இவரை சார்ந்தவர்கள் உணராதிருக்கிறார்களே என்பது தான் எனக்கு கவலையாகயிருக்கிறது. கிறிஸ்துவினுடைய மணவாட்டி என்று அழைக்கப்படும் சபைக்கு இவர் ஒரு பாஸ்டரா? பாஸ்டராக இருப்பாரானால் அது ஒரு வெட்கக்கேடு.

75. இந்த திருமணத்தை நடத்தி வைத்தவர் பெரவலூர் பெரியவர். பாருங்கள், இவர் ஒரு விசுவாசியையும் மற்றொரு அவிசுவாசியையும் இணைத்து வைக்கலாமா? அந்தப் பெண் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, கீழ்படிந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கூட எடுக்கவில்லை என கேள்விப்பட்டேன். தேவனுடைய சபையைக் கொண்டுதானே இவர் திருமணம் செய்துவைக்க அரசாங்கத்திலிருந்து அங்கீகாரம் பெற்றார். இப்படியிருக்க இவர் ஒரு விசுவாசிக்கு ஒரு அவிசுவாசியை இணைத்து வைக்கலாமா? இருவரும் அவிசுவாசிகள் என்றால் கூட இவர் இணைத்து வைக்கலாமா? கூடாதே!

76. மேலும் மணமகன் தகப்பனார் இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள ஒரு பாஸ்டர் என தன்னை அழைத்துக் கொள்கிறார். இவருக்கென்று ஒரு சபை இருக்கிறது. இப்படியிருக்க, இக்காலத்துக்குரிய செய்திக்கு மாறாக திருமணத்தை ராமராஜன் திருமண மண்டபத்தில் வைத்து நடத்தி வைக்கலாமா? பொதுவாக திருமண மண்டபங்கள் பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடாயிற்றே. இப்படியிருக்க உங்கள் ஊர் பொதுமக்கள் (1கொரி. 6:9,10) கூடும் ஒரு இடத்தில் தேவனுடைய குமாரனுக்கும், குமாரத்திக்கும், திருமணத்திற்கு இடமேது? அங்கு தேவனுடைய மனுஷன் சென்று திருமணத்தை நடத்தி வைக்கலாமா? கூடாதே. இருவரும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட பாஸ்டர்கள் அல்ல. இவர்கள் இருவரையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் இவர்கள் இருவரும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக தேவனுக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். தங்கள் பொருளாதார நிலை கொண்டும், தங்களை சார்ந்த சிலரைக் கொண்டும் மக்கள் மனதை மயக்குகிறார்கள்.

77. பொன்னேரி பாஸ்டர் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து ஊதியம் பெறுகிறவர். பெரவலூர் பாஸ்டர் தன் மனைவியாகிய சகோதரியை பொதுப்பணி ஸ்தலத்தில் வேலைக்கு அனுப்பி ஊதியம் பெறுகிறவர். இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். ஆதலால் தான் இனம் இனத்தைச் சேர்ந்துள்ளது. இதனால் நான் நேசிக்கும் குடும்பத்தை பெரவலூர் சபையில் ஐக்கியம் கொள்ளாதீர்கள் என்றேன். அவர்கள் தங்கள் மனம் போன போக்கில் போகிறார்கள். அவர்கள் விருப்பத்திற்கு அவர்களை விட்டு விடுவதுதானே நலம். பொன்னேரி பாஸ்டரையும் தங்கள் பாஸ்டராக ஏற்றுக்கொண்டு எனக்கு அருமையான ஓரிரு குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்காகவும் பரிதபிக்கிறேன். முடிவாக பெரவலூர் சபையும் பொன்னேரி சபையும் சத்தியத்திற்காக வெகு விரைவில் உடைந்தால் அது அநேக ஆத்துமாக்களுக்கு நலமாய் இருக்கும். அவர்கள் சத்திய வழியில் தங்கள் நடைகளை உறுதிப்படுத்திக் கொள்ள பிரயோஜனமாயிருக்கும். அந்த வேளை என்று வருமோ? ஜெபியுங்கள். உங்கள் ஜெபமே ஜெயம்.

78. கர்த்தர் எனக்கு இந்த, அந்த வெளிப்பாட்டை கொடுத்தார் எனக் கூறி தன்னை பெருமைப்படுத்தி உங்களை வஞ்சிக்கும் சாத்தானை பாஸ்டராக ஒருபோதும் அங்கீகரிக்காதீர்கள். தேவஇரகசியங்களின் வெளிப்பாடு பாஸ்டர்களுக்கு ஒருகாலும் வராது. அது தீர்க்கதரிசிகளுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் உரியது. மேலும் லவோதிக்கேயா சபைக்கு வேண்டிய தேவஇரகசியங்களுக்கடுத்த வெளிப்பாடுகள் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுவிட்டன.

79. ஒருவன் அவ்வப்போது தன்னை பாஸ்டர் என்றும், சுவிசேஷகன் என்றும், சகோதரன் என்றும் அழைத்துக் கொண்டு ஊழியத்தில் உள்ள மற்றொருவனுக்கு விரோதமாக பொய்யானவைகளை பிணைத்து இடும்புக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடருவானாகில் அவனையும் உங்கள் வீட்டு வாசற்படியில் ஏற்றாதீர்கள். இவன் மகா பயங்கரமானவன். ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன் என்றும் ஊழியத்தின் பாதையில் யார் மேலும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரமாட்டான். பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள வேதாகம முறைமைகளை கையாளுவான். வேதாகமத்தில் அனைத்து பிரச்சனைகளுக்கும் வழிகள் உண்டு. இங்கு நான் எனக்காக வக்காலத்து வாங்கவில்லை. நான் எதையும் சந்திக்கக்கூடிய மனப்பக்குவம் கொண்டவன்.

80. பொதுவாக நான் பார்த்த இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ளோம் என்று கூறுகிறவர்கள் மத்தியில் பொருளாசை என்னும் அக்கிரமம், பேராசை மிக மிக அதிகம். உலகம் அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது. கிறிஸ்து தங்கள் உள்ளத்தில் இருப்பது போல் நடிக்கிறார்கள். ஆனால் அவர் அங்கு இல்லை. எல்லாமே வெளிவேஷமாக இருக்கிறது. ஏனென்றால் இவர்கள் கனிகள் அனைத்தும் உலகத்துக்கடுத்ததாகவே இருக்கிறது. தேவனுடைய இராஜ்ஜியத்துக்கு அடுத்த காரியங்களில் இவர்களுக்கு நாட்டமே இல்லை. நன்றாக சம்பாதிக்க வேண்டும், ஆணும் பெண்ணும் சம்பாதிக்க வேண்டும். சுகபோகமாக வாழ வேண்டும். L.I.C., வங்கி, சிட்பண்ட்ஸ்களில் பணம் சேமிக்க வேண்டும். தன்னிடம் பணம் இருப்பதாக காட்டிக்கொள்ள கூடாது. யாராவது கடன் கேட்டு விடுவார்கள். ஆதலால் எப்பொழுதும் பஞ்சப்பாட்டு பாடிக்கொண்டேயிருக்கவேண்டும். ஆனால் தங்கள் குடும்ப தேவைகளுக்கு தட்டுப்பாடே கிடையாது. ஊரை ஏமாற்றவே அந்த பஞ்சப்பாட்டு. ஆனாலும் பிரதி ஞாயிறு மட்டும் ஏதோ கடமைக்காக ஒரு சபைக்கு சென்று ஐக்கியம் வைத்துக்கொள்ள வேண்டும். அதில் பெருமைபட்டுக் கொள்ளவேண்டும். கர்த்தருக்குரிய

தசமபாகத்தை பாஸ்டருக்குரியதாக்கி அதை பாஸ்டரிடம் கொடுத்துவிட்டு, பாஸ்டரிடம் ஜெபித்துக் கொண்டு வெளியே வரவேண்டும். அத்துடன் தங்கள் பணி முடிந்து விட்டது என நினைக்கிறார்கள். மாய்மாலகாரர்களே உங்களுக்கும் தேவனுடைய இராஜ்ஜியத்துக்கும் வெகு தூரம். நீங்கள் முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தை தேடாவிட்டால் அவருடைய இராஜ்ஜியத்துக்கு புறம்பே. நீங்கள் உங்களை மணவாட்டி, மணவாட்டி என்று அழைத்துக் கொள்வதால் கிறிஸ்துவின் மணவாட்டியாகிவிட முடியாது. பண ஆசை எல்லா தீமைக்கும் வேர். அதை இச்சித்து அநேகர் தங்கள் விசுவாசத்தை விட்டு அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்தி கொண்டிருக்கிறார்கள். வாருங்கள், முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்திற்குரியவைகளை தேடுங்கள்.

## உன் சத்துரு உனக்கு விரோதமாக இச்சகம் பேசி முடிவில் அடங்குவான்

81. எனக்கு எதிராக நீதிமன்றத்தில் கோவை ராஜா வழக்கு தொடர்ந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். நான் என் சரீர பெலவீனத்தின் நிமித்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. ஆதலால் என் மீது பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நான் மருத்துவ ஆலோசனைபடி வீட்டில் சிறைக்கைதி போல் இருக்கவேண்டும். பிரயாணங்களுக்கு அது தடை விதிக்கிறது. மேலும் இது மழை காலமாகவும், குளிர்காலமாகவும் இருப்பதால் நான் நீதிமன்றம் செல்ல தடைபட்டுள்ளேன். இந்த குளிர் காலத்துக்கு பின்பு நான் நீதிமன்றம் சென்று வரவேண்டும். அதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

82. கோவை ராஜா எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததற்கு அவர் கூறும் காரணங்கள் 1. நான் இவரை கடினமான வார்த்தைகளினால் விமர்சித்து வருகிறேன் என்பது. ஆனால் இவர் என்னை மிகவும் கீழ்த்தரமான வாத்தைகளினால் விமர்சித்து வருவதை மறந்து விட்டாரா அல்லது மறைக்கிறாரா? நான் இவர் காரியங்கள் குறித்து தேவனுடைய வார்த்தையில் காணப்படும் சொற்களைக் கொண்டே விமர்சிக்கிறேன். ஆனால் அவரோ என்னை உலகப்பிரகாரமான, அநாகரீகமான, ஆபாசமான சொற்களால் விமர்சித்து வருகிறார். நீங்களே அதை நன்கு அறிவீர்கள். 2. நான் இவரது ஜாதியை இழிவாக விமர்சித்தேன் என்பது. இது நூற்றுக்கு நூறு சதவீதம் பொய் என்பது தேவனுடைய சபைக்கு நன்றாகத் தெரியும். 3. நான் கோவையில் இவர் வசிக்குமிடத்தில் அங்குள்ள பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்ததாகவும், இவர் அவ்வழியே செல்வதைக் கண்டு, இவரை இகழ்ந்து பேசி, அடிக்கச்சென்றதாகவும் குற்றச்சாட்டு. இவர் காவல்நிலையத்துக்கு சென்று புகார் கொடுக்கவில்லையாம். ஏனென்றால் அங்கு எனக்கு செல்வாக்கு உண்டாம். கதைக்கு கண், காது, மூக்கு, வைத்து ஜோடிப்பு எப்படி அருமையாக அமைந்துள்ளது என்று நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

83. ஆக இவர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்தவுடன், நானும் எனக்கு அறிமுகமான சில வழக்கறிஞர்களை ஆலோசித்தேன். அவர்கள் யாவரும் இவர் என்னைக்குறித்து இழிவாக எழுதியிருப்பதால் பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு தொடர கேட்டுக்கொண்டார்கள். நான் அவர்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாமல் கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக காத்துக்கொண்டிருந்தேன். நான் ஊழியத்தின் பாதையில் யாருக்கும் எதிராக நீதிமன்றம் செல்லக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். காலங்கள் கடந்து கொண்டிருந்தது. இவர் அடிக்கடி நீதிமன்ற வழக்கு, வழக்கு என எழுதி வருவதால் மனம்மாறி மீண்டும் பூந்தமல்லியில் வழக்கு தொடர ஏற்பாடுகள் செய்து, அனைத்து எழுத்து மூலமான சாட்சி ஆவணங்களை சேகரித்து முடிவில் எனது மருத்துவ ரிப்போர்ட் நகல் எனது பைலில் (File) இருந்து எடுக்கச்சென்றேன். அப்பொழுது **இயேசு விடுவிக்கிறார்.** மே 2006 இதழ் அதனுள் இருந்து கீழே விழுந்தது. அதைப் பார்க்கும்பொழுது அதன் முகப்பு அட்டையில் **பயப்படாதே நீ வெட்கப்படுவதில்லை.** (ஏசா.54:4) என எழுதியிருந்தது. நான் என்னுடைய முடிவு குறித்து மீண்டும் சிந்திக்கலானேன். **கர்த்தர் முடிவில் எனக்கு உபா.33:29 வசனத்தை கொடுத்தார். இஸ்ரவேலே நீ பாக்கியவான்; கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்கு சகாயஞ் செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே: உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்: அவர்கள் மேடுகளை மிதிப்பாய் என்று சொன்னார் என்பதாகும்.**

84. மேற்கண்ட வசனத்தை வாசித்தவுடன் நான் தயார் செய்து வைத்திருந்த அனைத்து சேகரிப்புகளையும், மூட்டைக்கட்டி வைத்துவிட்டு, கர்த்தர் எனக்காக போராடுவதால், அவர் மீது அனைத்து பாரங்களையும் வைத்து விட்டு நிம்மதியாக கிறிஸ்துவுக்குள் மனரம்மியமாக இருக்கிறேன். உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். இது கர்த்தருடைய ஊழியக்காரனின் சுதந்தரம். ஏசா.54:17. ஆம், இது என் சுதந்தரம். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

**85. முடிவாக இந்த 2007 வது ஆண்டில் நான் உங்களை தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் ஒப்புக் கொடுக்கிறேன். நீங்கள் தேவனுடைய வார்த்தையிலும், இக்காலத்துக்குரிய செய்தியிலும் ஒரு பரிபூரண மனிதனுடைய வளர்ச்சியில் வளர்ந்து பெருகுவீர்களாக. அந்நிய போதனைகளையும், உபதேசங்களையும், வெளிப்பாடுகளையும் புறம்பே தள்ளுங்கள். அவைகள் அப்பிரயோஜனமானது. அக்கிரமகாரனுடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.**

86. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென்!!

ஜனவரி, 2007

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**